# புதிய ஜனநாயகம்

மார்ச் 2017
ரூ. 15.00

விவசாயிகள் தற்கொலை... மீனவர் படுகொலை...
ஹைட்ரோ கார்பன் பேரழிவு... தாமிரபரணி தண்ணீர் கொள்ளை...
பெட்ரோலில் வாட் கொள்ளை... நூறு நாள் வேலைக்குக் கூலி இல்லை...
முதியோர் பென்சன் இல்லை... ரேசன் இல்லை...
குடிக்கத் தண்ணீரும் இல்லை...

## தமிழகமே சாகிறது!

# ஜெயா எப்படிச் செத்தால் நமக்கென்ன?



# தகுதி, திறமை, நுழைவுத் தேர்வு: புதிய மனுநீதி!

**தகுதி, திறமை என்ற போர்வையில், அந்தமான் நிக்கோபார் தீவுகளைச் சேர்ந்த பழங்குடியின மக்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய இட ஒதுக்கீடு உரிமையை அங்கீகரிக்க மறுத்திருக்கிறது, இந்திய மருத்துவ கவுன்சில்.**

“பழங்குடியின மாணவர்களே, பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறுங்கள்!” - இப்படியொரு அசாதாரணமான அறைகூவலையும் போராட்டத்தையும் நிக்கோபார் பழங்குடியின கவுன்சில் கடந்த ஆண்டில் கையில் எடுத்தது. இப்படியொரு துர்பாக்கியமான அறைகூவலை விடவேண்டிய நிலைக்கு நிக்கோபார் பழங்குடியின மக்களைத் தள்ளிய குற்றவாளி, இந்திய மருத்துவ கவுன்சில். மருத்துவப் படிப்பில், நிக்கோபார் பழங்குடியின மக்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய இட ஒதுக்கீடு உரிமையை, இந்திய மருத்துவ கவுன்சில் அங்கீகரிக்க மறுத்ததை எதிர்த்துதான் இந்த அறைகூவல் முன்வைக்கப்பட்டது.

இந்தியா “சுதந்திரமடைந்து” 68 ஆண்டுகள் கழிந்த பிறகு, 2015-இல்தான் அந்தமான்-நிக்கோபார் யூனியன் பிரதேசத்தில் முதல் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. “நிக்கோபார் தீவுகளைச் சேர்ந்த பழங்குடியின மாணவர்களுக்கு நவீன மருத்துவப் படிப்புக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது; அவர்கள் மூலம் தீவுப் பகுதிகளில் வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களுக்கு மருத்துவ - சுகாதார வசதிகள் கிடைப்பதை உத்தரவாதப்படுத்துவது” என்ற இரண்டு நோக்கங்களுக்காகத்தான், அந்தமான் - நிக்கோபார் தீவுகள் மருத்துவ அறிவியல் கழகம் என்ற பெயர் கொண்ட அம்முதல் மருத்துவ கல்லூரியைத் தொடங்கியிருப்பதாக அறிவித்தது, யூனியன் பிரதேச அரசு. ஆனால், இந்த நோக்கத்தைச் சிதைக்கும்விதமாகத் தனது விதிகளைக் காட்டி முட்டுக்கட்டை போட்டு வருகிறது, இந்திய மருத்துவக் கவுன்சில்.

அந்தமான் தலைநகர் போர்ட் பிளேயரில் 100 இடங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள அம்மருத்துவக் கல்லூரியில், மண்ணின் மைந்தர்களான பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்கள் வெறும் 17 தான். மீதமுள்ள 83 இடங்களில், 15 இடங்கள் அகில இந்திய ஒதுக்கீடுக்கும், அதுபோக எஞ்சிய 68 இடங்கள், அந்தமானில் குடியேறியிருக்கும் மேல்சாதிகளைச் சேர்ந்த இராணுவத்தினர், அதிகார வர்க்கம், வியாபாரிகளின் குலக்கொழுந்துகளுக்குக் கிடைக்கும்படி பொதுப் போட்டியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, மொத்தமுள்ள 100 இடங்களில் 83 இடங்கள் (15+68) பழங்குடியினத்தைச் சேராத மாணவர்களுக்கு மறைமுகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

குரங்கு அப்பத்தைப் பங்கு போட்ட கதை போன்ற இந்த அநீதியை, இந்திய மருத்துவக் கவுன்சில் தனது விதிமுறைகளைக் காட்டி நியாயப்படுத்துகிறது. இது மட்டுமின்றி, பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட 17 இடங்களும் அவர்களுக்கே கிடைப்பதிலும் தடை போடுகிறது.

இந்திய மருத்துவ கவுன்சிலின் விதிகளின்படி, இட ஒதுக்கீடின் அடிப்படையில் பழங்குடியின மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பதற்கு, அம்மாணவர்கள் நுழைவுத் தேர்வில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டுமாம். ஆனால், அந்தமான் மருத்துவக் கல்லூரிக்கு 2015-இல் நடத்தப்பட்ட பொதுநுழைவுத் தேர்வை எழுதிய 30 பழங்குடியின மாணவர்களில், ஒரேயொரு மாணவர்தான் 40 சதவீத தகுதி மதிப்பெண்ணைப் பெற்றிருந்தார். இதனால், பழங்குடியின மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 17 இடங்களில், 16 இடங்களைப் பழங்குடியினத்தைச் சேராத மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அநியாயமான நிலைமை ஏற்பட்டது.

இந்த நிலைமை கல்லூரி தொடங்கப்பட்டதற்கான

அந்தமான் தலைநகர் போர்ட் பிளேயரில் அமைந்துள்ள அந்தமான்-நிக்கோபார் தீவுகள் மருத்துவ அறிவியல் கழகம்.




தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

# ஜெயா எப்படிச் செத்தால் நமக்கென்ன?

ஜெயலலிதா எப்படிச் செத்திருந்தால் நமக்கென்ன? ''ஜெயலலிதா இயல்பாகவே நோய்வாய்ப்பட்டு இறக்கவில்லை, சசிகலா கும்பல் சதி செய்து கொன்று விட்டது'' என்று நிரூபிப்பதன் மூலம் ஜெயலலிதாவின் அரசியல் வாரிசாகத் தன்னை காட்டிக் கொள்வதும், கட்சிக்கும் இரட்டை இலை சின்னத்துக்கும் வாரிசுரிமை கொண்டாடுவதுமே பன்னீர்செல்வம் கும்பலின் நோக்கம். இதனுடன் இசைந்து போகின்ற வேறொரு நோக்கம் ஆளும் வர்க்கத்துக்கு, குறிப்பாக சங்க பரிவாரத்துக்கு இருக்கிறது. ஜல்லிக்கட்டு போராட்டம் முதல் தற்போதைய நெடுவாசல் மற்றும் மீனவர் போராட்டம் வரையிலான அனைத்திலும், தமிழகத்தின் பல்வேறு தரப்பு மக்களும் காட்டும் ஈடுபாடும் போர்க்குணமும் இவர்களைக் கவலைகொள்ள வைத்திருக்கின்றன. எச்.ராசா, பொன்னார், இல.கணேசன் போன்றோரின் சமீபத்திய குமுறல்களைக் கவனிப்பவர்கள் இதனைப் புரிந்து கொள்ள இயலும். மக்களிடம் அரும்பியிருக்கும் சுயமரியாதையையும் போர்க்குணத்தையும் கருக்கி, ''கருணையே வடிவான அம்மாவுக்கு நேர்ந்து விட்ட பரிதாபத்துக்குரிய மரணம் பற்றிப் பிலாக்கணம் வைக்கும் அடிமைகளாக'' எப்பாடுபட்டேனும் தமிழ் மக்களை மாற்றிவிட வேண்டுமென எல்லா ஆளும் வர்க்கக் கும்பல்களும் தவிக்கின்றன.

காவிரி மறுக்கப்பட்டதால் மரணத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் தஞ்சை விவசாயிகள். விவசாயிகளின் தற்கொலை அன்றாட நிகழ்வாகி வருகிறது. ''கடலுக்குப் போகும் தண்ணீரை கோக், பெப்சிக்குக் கொடுத்தால் என்ன?'' என்று வாதாடும் தமிழக அரசு, நெடுவாசல் போராட்டத்தில் மக்களை ஆதரிப்பது போல நாடகமாடுகிறது. ரேசன் கடைகள் மெல்ல மூடுவிழாவை நோக்கித் தள்ளப்படுகின்றன. நூறுநாள் வேலைத் திட்டக் கூலி பல மாதங்களாக வரவில்லை, முதியோர் ஓய்வூதியம் வரவில்லை. மக்களின் கழுத்தில் கத்தி வைத்துக் கொள்ளையிடுவது போல பெட்ரோலுக்கு அடாவடியாக வாட் வரி விதிக்கிறது அ.தி.மு.க. அரசு. தமிழ்ச் சமூகத்தின் காயத்தில் உப்பைத் தேய்ப்பது போல, மீனவ இளைஞனைச் சுட்டுக் கொல்கிறது சிங்கள இராணுவம்.

ஜெயாவின் சாவுக்கு விளக்கம் கேட்கும் பன்னீர் கும்பல், மேற்கூறிய பிரச்சினைகளுக்கு அளிக்கும் விளக்கம் சசிகலா கும்பல் அளிக்கின்ற அதே விளக்கமாகத்தான் இருக்கும். அ.தி.மு.க. என்பது ஜனநாயகத்தின் வாசனைகூட அண்டாத ஒரு கொள்ளைக் கூட்டம். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் வாழ்க்கை மர்மமாகத்தான் இருந்தது. அவர்களுடைய மரணமும் மர்மமாவதில் வியப்பில்லை. எம்.ஜி.யாரை ஜானகி விசம் வைத்துக் கொன்றதாக ஜெயலலிதா குற்றம் சாட்டினார். சசிகலா மீது குற்றம் சாட்டுகிறார் பன்னீர். அப்போலோ மருத்துவமனையில் நடந்த மர்ம நாடகத்தின் பங்காளிகள் இப்போது நியாயம் பேசுகிறார்கள்.

''காவிரிப் பிரச்சினையைக் கையாள்வது குறித்து அதிகாரிகளுக்கு ஜெயலலிதா வழிகாட்டினார்'' என்ற செய்தி வெளியானபோது, அந்தச் சந்திப்பின் புகைப்படத்தை வெளியிட்டு மக்களிடையே பரவும் வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கருணாநிதி கோரினார். ''நாகரிகமற்றவர்'' என்று அவரை வசை பாடினர் அ.தி.மு.க. அமைச்சர்கள். ''அமைச்சரவையும் முதல்வரும் மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்'' என்ற கோணத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போதெல்லாம், அதனைத் திமிர்த்தனமாக அலட்சியம் செய்தவர்கள், இப்போது தங்களது பதவிச் சண்டைக்காக ஜெயலலிதாவின் பிணத்தைத் தோண்டுகிறார்கள்.

அடிமைத்தனத்தின் முடை நாற்றத்தில் தமிழகம் மூச்சுத்திணறியது போதும். ஜெயலலிதா என்பவர் தமிழகத்தின் பொதுச்சொத்தைக் கொள்ளையிட்ட ஒரு கிரிமினல். மரணத்தின் காரணமாக தண்டனையிலிருந்து தப்பிய ஒரு குற்றவாளி. செத்துப்போன குற்றவாளியின் படத்திற்கு முன்னால் கும்பிட்டு விழுகின்ற திருடர்கள் ஒருபுறமும், உயிரோடு சிறையிலிருக்கும் குற்றவாளியின் காலில் விழுகின்ற திருடர்கள் ஒருபுறமும் நின்று லாவணி பாடுகிறார்கள். ''தமிழகத்தையே சாவின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தியிருப்பதற்குப் பொறுப்பான ஜெயலலிதா, எப்படிச் செத்திருந்தால் எங்களுக்கென்ன?'' என்று நாம் கேள்வி எழுப்பினால்தான் இந்த லாவணி நிற்கும். தமிழகம் சுயமரியாதையுடன் நிமிரும். ●


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 32 இதழ்: 5**

**மார்ச் 2017**

தனி இதழ்: ரூ. 15.00

ஆண்டு சந்தா: ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:

puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# ஹைட்ரோ கார்பன் திட்டம்:
# மோடி ஏவிவிடும் பேரழிவு!

**ஷேல் எரிவாயுவை எடுக்கும் நீரியல் விரிசல் முறைக்கு மிகப்பெருமளவு தண்ணீர் தேவை. ஷேல் கிணறுகள் இருக்கிற நீரை உறிஞ்சுவதுடன், மிச்சமிருக்கும் நீரையும் நஞ்சாக்கி விவசாயத்தையும் குடிநீரையும் அழிக்கிறது.**

நெடுவாசல் போராட்டத்துக்கு எதிராக பாரதிய ஜனதாக் கட்சியினர் கூறி வரும் பொய்களில் முதன்மையானது, இத்திட்டத்தை நாங்கள் கொண்டுவரவில்லை, காங்கிரசும் தி.மு.க.வும்தான் கொண்டு வந்தன என்பதாகும்.

காவிரிப் படுகையில் எண்ணெய் எரிவாயுக் கிணறுகள் ஏற்கெனவே உள்ளன என்பது உண்மை. மீத்தேன் திட்டத்தை அனுமதித்துப் பின்னர் அதற்காக தி.மு.க. வருத்தம் தெரிவித்ததும் உண்மை. காவிரிப் படுகையில் எண்ணெய் எரிவாயுவுக்கான ஆய்வுகளை ஓ.என்.ஜி.சி. மேற்கொண்டதும் உண்மை.

ஆனால் காங்கிரசு, தி.மு.க.வின் மேற்கண்ட நடவடிக்கைகளும், தற்போது மோடி கொண்டுவந்திருக்கும் ஹைட்ரோ கார்பன் திட்டமும் ஒன்றுதான் என்று பாரதிய ஜனதா சொல்கிறதே, அது கடைந்தெடுத்த பொய். அம்பானி போன்ற கார்ப்பரேட் முதலாளிகள் எடுப்பது எண்ணெயா, எரிவாயுவா என்று பார்க்கும் அதிகாரமும், எவ்வளவு எடுக்கிறார்கள் என்று சோதிக்கும் அதிகாரமும் இதற்கு முந்தைய அரசின் துரப்பணவுக் கொள்கையில் (New Exploration and Licencing Policy) அரசாங்கத்திடம் இருந்தது.

மார்ச் 2017-இல் அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரிலிருந்து, பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்திருக்கின்ற புதிய கொள்கை (Hydrocarbon Exploration and Licencing Policy - HELP), "கிணற்றை ஏலம் எடுக்கும் கார்ப்பரேட் கம்பெனி, அதிலிருந்து எண்ணெயோ, எரிவாயுவோ, மீத்தேனோ, ஹைட்ரோ கார்பனோ எடுத்து விற்கலாம். எதை எடுக்கிறார்கள், எவ்வளவு எடுக்கிறார்கள் என்று அரசு கண்காணிக்காது. அவ்வாறு செய்வது கார்ப்பரேட்டுகளின் சுதந்திரத்தில் தலையிடுவதாக இருப்பதால், கண்காணிப்பை நீக்கவிட்டோம்" என அறிவிக்கிறது.

அதேநேரத்தில், நெடுவாசலில் போராடும் மக்களுக்குப் "பின்னால்" இருப்பவர்கள் யார், "சைடில்" இருப்பவர்கள் யார் என்றெல்லாம் கண்காணிக்க வேண்டுமென மாநில அரசுக்கு உத்தரவு போடுகிறார் இல. கணேசன். கள்ளனைக் கண்காணிக்கக் கூடாது, காப்பானைத்தான் கண்காணிக்க வேண்டும் என்ற இந்த உன்னதமான கொள்கையை மோடிஜி அவர்கள் அவசரமாகக் கொண்டு வருவதற்கும் ஒரு தனிச்சிறப்பான காரணம் இருக்கத்தான் செய்கிறது.

கிருஷ்ணா-கோதாவரிப் படுகை எரிவாயு ஊழல் என்றழைக்கப்படும் மோடி - அம்பானி கூட்டுக்கொள்ளையை (19,700 கோடி ரூபாய்) சி.ஏ.ஜி. கண்டுபிடிக்க முடிந்ததற்கு முக்கியமான காரணம், எண்ணெய் எரிவாயு உற்பத்தியைக் கண்காணிப்

ஷேல் எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக பிலடெல்பியா நகரில் அமெரிக்க மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப்படம்)



பதற்கு அரசு கொண்டிருந்த அதிகாரம். அந்த அதிகாரத்தையே அரசிடமிருந்து பிடுங்கினால்தான் கார்ப்பரேட்டுகள் பூரண சுதந்திரத்துடன் கொள்ளையிட முடியும் என்பதனால்தான் புதிய (ஹெல்ப்) HELP கொள்கையை உருவாக்கியிருக்கிறார் மோடி. ஹெல்ப் கொள்கையின்படி நெடுவாசலில் சித்தேஸ்வரா நிறுவனம், மண்ணெண்ணெய் எடுக்கலாம், ஷேல் வாயு எடுக்கலாம், புதையல் கிடைத்தாலும் எடுக்கலாம். அரசாங்கம் கண்காணிக்காது.



பிரிட்டனின் ப்ரெஸ்டன் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்) ஷேல் எரிவாயு, மீத்தேன் திட்டங்களுக்கு எதிரான பிரிட்டிஷ் மக்களின் தொடர் போராட்டங்களால் அந்நாட்டில் இத்திட்டங்கள் கைவிடப்பட்டன.

நெடுவாசலின் ''மண்ணெண்ணெய் குழாய்'', ஹைட்ரோ கார்பன் குழாயாக மாற்றப்பட்ட கதை இதுதான்.

● ❍ ●

வடக்கே பாண்டிச்சேரியில் தொடங்கி தெற்கே மன்னார் வரை நிலத்தில் 25,000 ச.கிலோ மீட்டரும், கடலில் 30,000 ச.கிலோ மீட்டரும் கொண்டது காவிரிப் படுகை (Cauvery Basin) என்ற அவர்கள் குறிப்பிடும் பகுதி. காவிரிப்படுகையில் இவர்கள் எடுக்கத் திட்டமிட்டிருக்கும் ஹைட்ரோ கார்பனின் பெயர், ஷேல் எரிவாயு.

இந்தியாவில் 584 டிரில்லியன் கன அடி ஷேல் வாயு இருப்பதாகவும் அதில் 96 டிரில்லியன் கன அடி காவிரிப்படுகையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதில் அதிக செலவில்லாமல் இலாபகரமாக எடுக்கத்தக்கதாக 9 டிரில்லியன் (9,00,000 கோடி) கன அடி ஷேல்வாயு காவிரிப்படுகையில் உள்ளது.

1990-களின் துவக்கத்தில் ஷேல் எனப்படும் ஒரு வகை களிமண் பாறைகளில் இருக்கும் துளைகளுக்குள் எரிவாயு தங்கியிருப்பதை எண்ணெய் எரிவாயு நிறுவனங்கள் கண்டுபிடித்தன. சில ஆண்டுகளுக்குப் பின், பூமியில் 5 கி.மீட்டருக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து, அப்படியே பக்கவாட்டில் குடைந்து செல்வதற்கான தொழில் நுட்பமும் உருவாக்கப்பட்டது.

அவ்வாறு குடையப்பட்ட துளையின் வழியே வேதிப்பொருட்கள் கலந்த தண்ணீரை ஷேல் பாறைகளின் மீது பாய்ச்சி, அவற்றின் துளைகளுக்குள்ளே இருக்கும் எரிவாயுவை வெளியேற்றி எடுக்கின்ற ''நீரியல் விரிசல் முறை''யும் (Fracking) கண்டுபிடிக்கப்பட்டது.

நரிமணம், குத்தாலம் போன்ற இடங்களில் ஏற்கெனவே இருக்கின்ற கிணறுகள் வழமையானவை (conventional) என்றழைக்கப்படுகின்றன. ஷேல் கிணறுகள் வழமைக்கு மாறான ரகத்தை சேர்ந்தவை (unconventional). இரண்டும் ஒன்றுதான் என்று பா.ஜ.க.வினர் சித்தரிப்பது மிகப்பெரிய பித்தலாட்டம். ஷேல் வாயுக் கிணறுகள் ஏற்படுத்தும் பாதிப்பு பன்மடங்கு அதிகமானது.

தற்போது தஞ்சை டெல்டாவில் இருக்கும் பழைய வகை எரிவாயுக் கிணறுகள் ஒவ்வொன்றும் பத்து சதுர கி.மீ சுற்றளவில் உள்ள எரிவாயுவை உறிஞ்சி எடுக்கக் கூடியவை. எனவேதான், இந்த கிணறுகளுக்கான உரிமம் நூறு முதல் ஐநூறு சதுர கி.மீ. சுற்றுவட்டாரத்துக்குத் தரப்படுகிறது. ஆனால், ஷேல் வாயுக் கிணறுகளைப் பொருத்தவரை அவற்றின் உரிமப் பரப்பளவு சுமார் 25,000 சதுர கி.மீ இருக்கும் என்கிறார் இந்திய எரிசக்தி துறையின் ஆலோசகர் அனில் குமார் ஜெயின். எனவே, காவிரிப் படுகை முழுவதும் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்படும் என்ற அச்சம் கற்பனையானதல்ல.

இந்த துளைகளுக்குள் 78 விதமான வேதிப் பொருட்களும் மணலும் கலந்த தண்ணீர், ஒரு சதுர அங்குலம் பாறையின் மீது சுமார் 6 டன் அழுத்தத்தைக் கொடுக்கின்ற வேகத்தில் செலுத்தப்படும். வேதிப் பொருட்கள் கலந்த மணல் பாறைகளின் மெல்லிய துளைகளுக்குள் இருக்கும் எரிவாயுவை விடுவித்து மேல்நோக்கி அனுப்பும்.

இந்த ஆழ்துளைகளின் சுவர்கள், இரும்பாலும் கான்கிரீட்டாலும் கவசமிடப்படுவதால் கசிவு ஏதும் ஏற்படாது என்று எரிவாயு நிறுவனங்கள் கூறிக்கொண்டாலும், கசிவு ஏற்படுவது உண்மை என்று அமெரிக்காவிலேயே நிரூபணமாகியிருக்கிறது.

எரிவாயுவுடன் மீத்தேனும் சேர்ந்தே வெளியேறும் என்பதால், அது நிலத்தடி நீருடன் காற்று மண்டலத்திலும் கலந்து அதனை நஞ்சாக்கும். பாறைகளின் இடுக்குகளில் பல பத்தாயிரம் ஆண்டுகளாக பூமியினுள் தங்கியிருக்கின்ற கடல் நீர், பன்மடங்கு உவர்த்தன்மை வாய்ந்தது. கதிர் வீச்சையும் வெளிப்படுத்தக் கூடிய தன்மை கொண்டது. இந்தக் கடல் நீரும் மேல் நோக்கி வந்து நிலத்தடி நீருடன் கலக்கும்.

பூமிக்குள் செலுத்தப்பட்ட கோடிக்கணக்கான லிட்டர் வேதிப்பொருட்கள் கலந்த நீரில், மெத்தனால், ஹைட்ரஜன் புளூரைடு, கந்தக அமிலம், புற்று நோயை உருவாக்கும் பி.டெக்ஸ், காரீயம், பார்மால்டிஹைடு ஆகியவையும் அடக்கம். புற்றுநோயை உருவாக்குபவை என்று வகைப்படுத்தப்பட்ட 650 இரசாயனப் பொருட்களை, சுமார் ஒரு கோடி காலன் அளவுக்கு அமெரிக்க ஷேல் வாயு நிறுவனங்கள் பூமிக்குள் செலுத்தியிருப்பதாக 2011-இல் அமெரிக்க காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது.

மாசுபட்ட இந்த நீரை மீண்டும் அவர்கள் பயன்படுத்துவதில்லை. பென்சில்வேனியாவிலும் மேற்கு வர்ஜீனியாவிலும் இக்கழிவுநீர் ஆறுகளில் விடப்படுவது அம்பலமாகியிருக்கிறது. நம் ஊரில் என்ன நடக்கும்

என்பதை திருப்பூர், ஆம்பூர், கடலூர் ஆகியவற்றுக்கு நேர்ந்திருக்கும் கதியிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம்.

பூமியில் குப்பையைப் புதைப்பது போல, அருகாமையிலேயே இன்னொரு கிணறு தோண்டி, கழிவுநீரை பூமிக்குள் செலுத்துகின்றன எரிவாயுக் கம்பெனிகள். இதனால் நிலத்தடி நீர் நஞ்சாவது மட்டுமல்ல, ஷேல் வாயு எடுக்கப்படும் மாநிலங்களிலெல்லாம் நிலநடுக்கம் அதிகரித்திருப்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.



ஹைட்ரோ கார்பன், ஷேல் எரிவாயுத் திட்டங்களின் விளைவாக அமெரிக்காவின் ஓக்லஹோமா மாநிலத்தில் நடந்த நிலநடுக்கம். (கோப்புப்படம்)

கம்பெனியின் கைப்பிள்ளைகள். சுற்றுச்சூழல் சட்டத்தில் போடப்பட்டிருக்கும் இந்த ஓட்டைக்கு, “ஹாலிபர்ட்டன் ஓட்டை” என்றே அங்கு பெயர் சூட்டியிருக்கிறார்கள். (நாமும் மோடியின் எரிசக்திக் கொள்கையை “ஹெல்ப் அம்பானி கொள்கை” என்று அழைக்கலாம்.)

ஷேல் வாயு எடுக்கப் பயன்படுத்தப்படும் வேதிப்பொருட்கள் மூளை, கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல் ஆகியவற்றைப் பாதிக்கக்கூடியவை; தோல் நோய்கள் முதல் புற்றுநோய் வரை பலவற்றையும் தோற்றுவிக்கக் கூடியவை என்று அமெரிக்க சூழல் ஆய்வு நிறுவனம் பல தரவுகளைத் தொகுத்திருக்கிறது. ஆனால், இந்த சட்டம் கொண்டு வரப்பட்டபின் அத்தரவுகளை தனது ஆய்வறிக்கையிலிருந்தே நீக்கியிருக்கிறது.

இதுதான் அமெரிக்காவின் நிலை என்றால், இந்தியாவில் என்ன நடக்கும் என்பதைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. 2022-இல் எண்ணெய் இறக்குமதியில் 10% குறைக்க வேண்டும் என்ற இலட்சியத்துக்காகத்தான், காவிரி உள்ளிட்ட படுகைகளைப் பாலைவனமாக்குகிறார்களாம். இந்தப் பேரழிவுக்கு மோடி சூட்டியிருக்கும் பெயர் வளர்ச்சி. அந்த வளர்ச்சிப் பாதையைக் கேள்விக்குள்ளாக்காதவரை, இந்த அழிவுப்பாதையிலிருந்து நாம் நாட்டை மீட்க முடியாது.

அனைத்திற்கும் மேல் முதன்மையான பிரச்சினை தண்ணீர். நீரியல் விரிசல் முறைக்கு மிகப்பெருமளவு தண்ணீர் தேவை. ஷேல் கிணறுகள் இருக்கிற நீரை உறிஞ்சுவதுடன், மிச்சமிருக்கும் நீரையும் நஞ்சாக்கி விவசாயத்தையும் குடிநீரையும் அழிப்பதால், எல்லா நாடுகளிலும் இதனை மக்கள் எதிர்க்கின்றனர்.

உலகில் மிக அதிகமான ஷேல் வாயு இருப்பு உள்ள நாடு சீனா. அடுத்து அல்ஜீரியா. சீனாவில் ஷேல் வாயு இருக்கின்ற பகுதிகள் வறட்சிப் பகுதிகள் என்பதால் அப்பகுதிகளில் எடுக்கப்படுவதில்லை. அல்ஜீரியா, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகளில் மக்கள் எதிர்ப்பால் இது கைவிடப்பட்டிருக்கிறது. பல்கேரியா, பிரான்சு போன்ற நாடுகளில் முற்றாகவும் ஜெர்மனியில் கணிசமாகவும் தடை செய்யப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானில் ஷேல் வாயு எடுப்பதற்கு உதவுவதாக அமெரிக்கா கூறியபோதிலும், தண்ணீர்ப் பஞ்சம் காரணமாக அந்நாட்டு அரசு இதுவரை இதில் இறங்கவில்லை.

அமெரிக்காவைப் பொருத்தவரை, அங்குதான் ஷேல் வாயு எடுப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்பதுடன், எண்ணெய் கம்பெனிகள் அமெரிக்க அரசியலைக் கட்டுப்படுத்தும் முக்கிய சக்திகளாகவும் இருக்கின்றன. அமெரிக்காவில் பெரும் நிலப்பரப்பு இருப்பதாலும், தண்ணீர் பற்றாக்குறை இல்லை என்பதாலும் ஷேல் வாயு எடுப்பது ஒப்பீட்டளவில் அதிகமாக நடக்கிறது. நீரும் சூழலும் நஞ்சாவது குறித்து எதிர்ப்புகள் இருந்த போதிலும், தமது அரசியல் செல்வாக்கின் மூலம் அந்த எதிர்ப்புகளை எரிவாயுக் கம்பெனிகள் முடக்கி விடுகின்றன.

ஷேல் வாயு நிறுவனங்களை அமெரிக்க அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் ஆய்வு செய்ய முடியாது என்றும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் சட்டத்திலிருந்து நீரியல் விரிசல் நடவடிக்கைக்கு விலக்களித்தும் 2005-இல் அதிபர் புஷ் சட்டத்திருத்தமே நிறைவேற்றியிருக்கிறார்.

அம்பானியும் அதானியும்தான் மோடியின் புரவலர்கள் என்பது போல, ஜார்ஜ் புஷ்ஷும் துணையதிபர் டிக் செனியும் ஹாலிபர்ட்டன் என்ற எண்ணெய்க்

● சூரியன்

குறிப்புதவி:


- *Prospectivity of Cauvery Basin inDeep Syn-rift Sequences, SE India, Arijit Chaudhuri , M. V. Rao , Feb3, 2010.*
- *Shale Gas Scenario in India and Comparison with USA,- Harsh Anjirwala, Bhatia.*
- *A review on shale gas prospect in Indian sedimentary basins: Kalachand Sain, Manish Rai, CSIR-National Geophysical Research Institute, Hyderabad .*
- *Shale gas in India, Challenges and prospects, Anil Kumar Jain, IAS, Adviser (Energy), NITI Aayog and Rajnath Ram, Joint Adviser, NITI Aayog.*
- *Global Shale Gas Development: Water Availability and Business Risks, World Resources Institute.*
- *Our Drinking water at risk: Oil and Gas Accountability Project April, 2005.*
- *Reliance, ONGC, BP and others to gain from cabinet's decision on new pricing for undeveloped fields, Energy Infra Post, mar, 10, 2017.*
- *Drilling for Earthquakes, Scientific American, March 28, 2016.*

# ஹைட்ரோ கார்பன் திட்டம்:

# பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பாய் விரிக்கும் மோடி!

**இந்த திட்டத்தின் நோக்கம் சுயசார்பும் அல்ல, அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதும் அல்ல. நாட்டின் வளங்களை கார்ப்பரேட்டுகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் கூறுபோட்டு விற்பதுதான்.**

மீத்தேன் எரிவாயுத் திட்டத்தை எதிர்த்து விவசாயிகள் போராடிய தையடுத்து, அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக நாடகமாடிய மோடி அரசு, அதே திட்டத்தை "ஹைட்ரோ கார்பன் திட்டம்" என்ற பெயரில் நரித்தனமாகக் கொண்டு வந்துள்ளது. கூடங்குளம் அணு மின்நிலையம், நியுட்ரினோ ஆய்வுத் திட்டம், ஷேல் எரிவாயுத் திட்டம், கெயில் எரிவாயுக் குழாய்பதிப்பு மற்றும் தமிழகக் கடற்கரை முழுவதையும் அணு மின்னுற்பத்திக் குவிமையமாக்கும் திட்டம் ஆகியவற்றின் வரிசையில் தமிழகத்தைச் சுடுகாடாக்குவதற்கு மோடி கையில் எடுத்திருக்கும் ஆயுதம் இந்த ஹைட்ரோ கார்பன் திட்டம்!

ஹைட்ரஜன், கார்பன் என்ற இரு வேதிப்பொருள்கள் இணைந்த மீத்தேன், ஈத்தேன், புரோத்தேன், ஹெக்சேன், மண்ணெண்ணெய், பெட்ரோலியம் போன்ற 14 வகைக் கனிமங்கள் ஹைட்ரோ கார்பன்கள் எனப்படுகின்றன. பூமிக்கடியில் சுமார் 6000 மீட்டர் ஆழம் வரை பாறை இடுக்குகளில் படிந்திருக்கும் இந்த எரிவாயுவை ஆழ்துளையிட்டு உறிஞ்சி எடுப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம்.

இந்தியாவின் எண்ணை மற்றும் எரிவாயுவின் ஒரு ஆண்டுத் தேவை 226 மில்லியன் டன்கள். இதில் 70 மில்லியன் டன்கள் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது, நமது மொத்தத் தேவையில் 78 சதவீதத் தேவைக்கு இறக்குமதியை நம்பியுள்ளோம். அதிகரித்துவரும் இந்த இறக்குமதியில் 10 சதவீதத்தைக் குறைப்பதுதான் நோக்கம் என்று மோடி அரசு கூறுகிறது. இந்தக் கூற்று உண்மையா?

ஓ.என்.ஜி.சி., ஆயில் இந்தியா ஆகிய இரு பொதுத்துறை நிறுவனங்கள், இந்தியா முழுவதும் ஆய்வு செய்து எண்ணெய் மற்றும் எரிவாயுக்கள் அதிகமுள்ள 310 இடங்களைக் கண்டறிந்தன. இதில் முதல்கட்டமாக, மகராஷ்ட்ராவில் 29, ஆந்திராவில் 15, அஸ்ஸாமில் 13, குஜராத்தில் 6, இராஜஸ்தானில் 2, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 2, (நெடுவாசல், காரைக்கால்) என மொத்தம் 67 இடங்களில் ஆய்வுக்கான நிலங்களைக் கையகப்படுத்தி, ஒவ்வொரு இடத்திலும் எத்தனை டன் எண்ணெய் உள்ளது, எத்தனை கனஅடி எரிவாயு உள்ளது என்று ஆய்வுகள் செய்து முடித்துள்ளன. இவ்வாறு மக்கள் வரிப்பணத்தைச் செலவிட்டு கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் எரிவாயுவை, அன்னிய நிறுவனங்களுக்கும், தனியார் முதலாளிகளுக்கும் தாரை வார்ப்பதென்று முடிவு செய்திருக்கிறார் மோடி.

2016 டிசம்பர் 5-ம் தேதி, சர்வதேச எண்ணெய் நிறுவன முதலாளிகள் கலந்துகொண்ட ''பெட்ரோல் டெக்''' என்ற சர்வதேச மாநாட்டில் பேசிய மோடி, "இந்தியாவில் பழைய லைசென்ஸ் நடைமுறைகள் கைவிடப்பட்டு விட்டன. இப்போது அந்நிய நிறுவனங்களை இந்திய நிறுவனங்களைப் போல கையாள்கிறோம். தாராள சலுகை அனுமதிகள் வழங்குகிறோம். இந்தியாவின் எண்ணெய் எரிபொருள் தேவை ஒவ்வொரு ஆண்டும் 3.5% அதிகரித்து வருகிறது. எனவே, இந்தியாவில் தயக்கமின்றி முதலீடு செய்யுங்கள்" என கார்ப்பரேட் கம்பெனிகளை தாஜா செய்தார்.

பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், "கண்டுபிடிக்கப்பட்ட சிறு வயல்களின் ஏலத்தில் இந்தியப்

நெடுவாசலில் ஷேல் எரிவாயுவை எடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறு.



பொதுத்துறை நிறுவனங்களான ஓ.என்.ஜி.சி., மற்றும் ஆயில் இந்தியா நிறுவனங்கள் கலந்து கொள்ளாது'' என்று அன்னிய முதலாளிகளுக்கு சத்தியம் செய்கிறார்.

பன்னாட்டு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மோடி அரசு வழங்கும் வாக்குறுதிகளையும் சலுகைகளையும் பாருங்கள்:




''பெட்ரோல் டெக்'' சர்வதேச மாநாட்டில் பிற நாட்டுத் தலைவர்கள், முதலீட்டாளர்களுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி.

- ஏலம் எடுக்கும் நிறுவனங்களுக்கு தொழிலில் முன்அனுபவம் எதுவும் தேவையில்லை. தொழில் நுட்ப அறிவு மட்டும் இருந்தால் போதுமானது.
- இதற்கென இறக்குமதி செய்யப்படும் எந்திரங்கள் உள்ளிட்ட கருவிகள் அனைத்துக்கும் சுங்க வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- ஏலம் எடுத்த நிலப்பரப்பில் எத்தனை கிணறுகள் வேண்டுமானாலும் தோண்டிக் கொள்ளலாம்! இத்தனை மீட்டர் ஆழம்தான் தோண்ட வேண்டும் என்றும் நிபந்தனை இல்லை.
- ஷேல், மீதேன் உள்ளிட்ட எல்லா வகையான ஹைட்ரோ கார்பன்களையும் எடுப்பதற்கு எந்தவித தடையோ, கட்டுப்பாடோ கிடையாது.
- பெட்ரோலியப் பொருட்களுக்கு விதிக்கப்படும் சுங்க வரி கிடையாது, எரிவாயுவுக்கு ராயல்டி 10% மட்டுமே.
- உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் மற்றும் எரிவாயுவைச் சர்வதேச சந்தை விலையில் விற்றுக் கொள்ளலாம். ஏலம் எடுக்கும் அந்நிய நிறுவனங்களுக்கு அமெரிக்க டாலரில் பணம் பட்டுவாடா செய்யப்படும்.
- ஒப்பந்த காலமான 15 ஆண்டுகள் முடிந்தபின், மேலும் 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் நீட்டிக்க முடியும். ஒப்பந்த காலத்தில் ஏதாவது ஒரு காரணத்தாலோ அல்லது காரணமின்றியோ திட்டத்திலிருந்து விலகும் நிறுவனங்களுக்கு அபராதம் எதுவும் விதிக்கப்படாது.

இப்படி அடுக்கடுக்கான சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறது மோடி அரசு.

எண்ணெய், எரிவாயு வயல்களைச் சர்வதேச சந்தையில் ஏலம் விடுவதற்காக மோடி அரசு நியமித்திருக்கும் பிரைஸ் வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் என்ற தரகு கம்பெனி வெளியிட்டிருக்கும் ஆவணமும், 14.10.2015 தேதியிட்ட பெட்ரோலிய அமைச்சகத்தின் ஆவணமும், டைரக்டரேட் ஜெனரல் ஆப் ஹைட்ரோ கார்பன்ஸ் - இன் ஆவணங்களும் மேற்கூறிய விவரங்களுக்கு ஆதாரமாக இருக்கின்றன.

நெடுவாசல், காரைக்கால் மட்டுமல்ல, தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர், இராமநாதபுரம், அரியலூர், ஆகிய மாவட்டங்களில் சுமார் 3,500 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 398 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டவும் திட்டமிட்டுள்ளது மோடிஅரசு. நெடுவாசலை பி.ஜே.பி.-யின் முன்னாள் மத்திய மந்திரியான ஜி.எம்.சித்தேஸ்வராவின் குடும்பத்திற்கு கொடுத்துள்ளதைப் போல, கிருஷ்ணா-கோதாவரிப் படுகையை ரிலையன்ஸ் மற்றும் அதானிக் குழுமத்திற்கும், இராஜஸ்தானில் வேதாந்தா மற்றும் கெய்ர்ன் நிறுவனங்களுக்கும், குஜராத்தில் அதானிக்கும் ஒதுக்கியிருக்கிறது மோடி அரசு. இதற்காக நாடு முழுவதும் 16,82,657 சதுர கி.மீ. பரப்பளவு நிலங்கள் கண்டுபிடிப்புகளுக்கும், எண்ணெய் உற்பத்திக்கும் விநியோகிக்கப்பட்டு உள்ளதாகவும், இதில் 2015-16 வரை சுமார் 40 பில்லியன் டாலர் தனியார் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

நாட்டின் வளங்களை கார்ப்பரேட்டுகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் கூறுபோட்டு விற்பதுதான் மோடி அரசின் நோக்கம்.

இதன்படியே, காவிரி வடிநிலத்தை ஹைட்ரோ கார்பன் வேட்டைக்குப் பயன்படுத்துவதற்காகவே காவிரி நீரை மோடி அரசு திட்டமிட்டே தடுத்து வருகிறது.

நெடுவாசல் பூமியின் அடியில் கிடக்கும் வளத்தைக் குத்தகைக்கு எடுத்துள்ள பா.ஜ.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஜி.எம். சித்தேஸ்வரா.



மோடி அரசு சொல்லிக் கொள்வது போல, இந்த திட்டத்தின் நோக்கம் சுயசார்பும் அல்ல, அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதும் அல்ல. நாட்டின் வளங்களை கார்ப்பரேட்டுகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் கூறுபோட்டு விற்பதுதான் மோடி அரசின் நோக்கம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

வெளிப்படையாகத் தெரியாத நோக்கம் ஒன்றும் மோடி அரசுக்கு இருக்கிறது. காவிரி வடிநிலத்தை ஹைட்ரோ கார்பன் வேட்டைக்குப் பயன்படுத்துவதற்காகத்தான், காவிரி நீரை மோடி அரசு திட்டமிட்டே தடுத்து வருகிறது என்பது இப்போது உறுதியாகிறது.

● மாறன்

# நெடுவாசல் ஹைட்ரோ கார்பன் திட்டம்:

# வளர்ச்சியல்ல, திருட்டு!

**ஆற்று மணலை, தாது மணலைத் தோண்டியெடுத்ததில், கிரானைட் மலைகளை வெட்டியெடுத்ததில் என்ன நடந்ததோ, அதுதான் நெடுவாசலிலும் நடக்கும்.**

“நமக்கு வேறு வேலை இல்லையா, ஒவ்வொன்றுக்கும் இப்படிப் போராட முடியுமா? எதற்காக இவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம்?” என்று நெடுவாசல் போராட்டம் பற்றி சமூக ஊடகமொன்றில் கோபமாகக் கேள்வி எழுப்பியிருந்தார் ஒரு பெண். இது தேர்ந்தெடுக்கப்படும் கட்சிகள் பற்றிய பிரச்சினை மட்டுமே என்று அவரும் அவரைப் போன்ற பலரும் புரிந்து கொண்டிருக்கக் கூடும். இது வெறும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பான பிரச்சினை அல்ல, போலீசு, அதிகார வர்க்கம், நீதிமன்றங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய அரசமைப்பு தொடர்பான பிரச்சினை.

நெடுவாசலில் விளைநிலங்களையும் நீராதாரங்களையும் காப்பாற்றுவதற்காக விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். வணிகர்கள் கோக், பெப்சி விற்பதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். வரலாறு காணாத வறட்சியை அச்சத்துடன் எதிர்நோக்கியிருக்கிறது தமிழகம். இந்தச் சூழலில், “தாமிரபரணியிலிருந்து கோக், பெப்சி நிறுவனங்கள் தண்ணீர் எடுப்பதற்குத் தடையில்லை” என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது சென்னை உயர்நீதி மன்றம். வீணாகக் கடலுக்குப் போகும் தண்ணீரைத்தான் கொடுக்கிறோம். அதனால் பாதிப்பில்லை என்று கூறியிருக்கிறார் சசிகலா அரசின் வழக்கறிஞர்.

“கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் உள்ள மற்ற நிறுவனங்கள் தாமிரபரணித் தண்ணீரைப் பயன்படுத்துவதை ஆட்சேபிக்காமல், கோக் - பெப்சியை மட்டும் ஏன் குறிவைத்துத் தாக்குகிறீர்கள்” என்று கேட்டிருக்கிறார்கள் நீதிபதிகள். உற்பத்திக்குத் தண்ணீரைப் பயன்படுத்தும் ஆலைகளுக்கும், தண்ணீரை உறிஞ்சி விற்பதையே தமது தொழிலாகக் கொண்டிருக்கும் கோக் பெப்சிக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்ள இயலாதவர்கள் என்று மாண்புமிகு நீதியரசர்களை நாம் கருதவியலாது. “சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என்ற அரசியல் சட்டத்தின் சமத்துவ உணர்ச்சியால் உந்தப்பட்டுதான் பொதுச்சொத்தைக் கொள்ளையிடுவதற்கு கோக்-பெப்சிக்கு உள்ள உரிமையை அவர்கள் உத்திரவாதப் படுத்தியிருக்க வேண்டும்.

“கோக், பெப்சியை மட்டும் ஏன் தடுக்கிறீர்கள்?” என்று உயர் நீதிமன்றம் கேட்டதைப் போலத்தான், “நரிமணத்திலும் குத்தாலத்திலும் தடுக்காமல், பா.ஜ.க. எம்.பி.யின் கம்பெனியை மட்டும் நெடுவாசலில் ஏன் தடுக்கிறீர்கள்?” என்று வெடிக்கிறார் எச்.ராசா. “தாமிரபரணி தண்ணீரை எடுப்பதால் பாதிப்பில்லை” என்று கூறும் சசிகலா அரசின் முதல்வர் எடப்பாடி, “ஹைட்ரோ கார்பன் திட்டத்தை அனுமதிக்க மாட்டேன்” என்று போராட்டக் குழுவுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறாராம். எனவே, போராட்டத்தை உடனே முடிக்க வேண்டும் என்று மக்களை நிர்ப்பந்திக்கிறது போலீசு. மாணவர்களையும், மக்கள் அதிகாரம் அமைப்பினரையும் கிராமங்களிலிருந்து வெளியேற்றுமாறு விவசாயிகளை மிரட்டுகிறது.

• ○ •

“ஒரு ஆபத்தும் இல்லை” என்கிறார் பொன்னார். “தியாகம் செய்யுங்கள்” என்கிறார் இல.கணேசன். “மக்களின் ஒப்புதல் இல்லாமல் அமல்படுத்த மாட்டோம்” என்கிறார் மத்திய

வளர்ச்சி என்ற பெயரில் மோடி ஏவிவிட்டிருக்கும் ஹைட்ரோ கார்பன் பேரழிவை எதிர்த்து நெடிய போராட்டத்தை நடத்திவரும் நெடுவாசல் பகுதி விவசாயிகள்.



அமைச்சர். ''உடனே கலைந்து போ'' என்று மிரட்டுகிறது போலீசு.

நடந்து கொண்டிருப்பது வழிப்பறித் திருடர்களுடனான விவாதம். மத்திய அரசு, மாநில அரசு, காவல்துறை, நீதிமன்றம் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பதால், இவர்கள் வழிப்பறிக் கொள்ளையர்கள் என்ற உண்மை இல்லாமல் ஆகிவிடாது.



தாமிரபரணி தண்ணீரை கோக்கும் பெப்சியும் கொள்ளையடிப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்ததைக் கண்டித்துப் பகுதி மக்கள் ஆற்றில் இறங்கி நடத்திய போராட்டம்.

கழுத்து சங்கிலி அறுப்பவனோடு விவாதம் நடத்தித் தன்னுடைய நகையை ஒரு பெண் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? எனினும், இப்போது நடந்து கொண்டிருக்கும் விவாதம் அத்தகையதுதான். ''சங்கிலி சும்மாதானே கழுத்தில் கிடக்கிறது. அதை அறுத்து விற்றால் உனக்கு கொஞ்சம் ராயல்டி தருவேன். எனக்கு ஒரு பைக் வாங்குவேன். அதனால் என்பீல்டு கம்பெனிக்கு வியாபாரம் ஆகும். பல தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கும். மெக்கானிக் ஷாப்புக்கு வேலை பெருகும். அவர்களுக்கெல்லாம் ஊதியம் கிடைத்தால், அதை வைத்து அரிசி, பருப்பு வாங்குவார்கள், வணிகர்களுக்கு வியாபாரம் ஆகும், விவசாயிகளாகிய நீங்கள் நெல்லும் காய்கனியும் விற்றுப் பணம் பார்க்கலாம். இந்தியாவின் ஜி.டி.பி., சீனாவைவிட அதிக வேகத்தில் வளரும். யோசித்துப்பார். இந்த தேசத்துக்குப் பயன்படாமல், அந்த சங்கிலி உன் கழுத்தில் தொங்கி என்ன பயன்?'' என்கிறான் திருடன்.

வளர்ச்சி பற்றி திருவாளர் மோடியும், ஆளும் வர்க்கங்களும் அளிக்கும் வியாக்கியானங்கள் அனைத்தும் சங்கிலித் திருடனின் வியாக்கியானங்களே. ''வேஸ்டாக கடலுக்குப் போகும் தண்ணீரை எடுத்து பாட்டிலில் அடைத்து கின்லே, அக்குவா பினா என்று பெயர் வைத்துத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்குகிறோம். தமிழக அரசுக்கு ஆயிரம் லிட்டருக்கு 15 காசு ராயல்டியும் கொடுக்கிறோம். தண்ணீர் கடலுக்குப் போனால் ராயல்டி கிடைக்குமா, யுவர் ஆனர்'' என்று கோக்-பெப்சி எழுப்பும் கேள்விக்கும் சங்கிலித் திருடனின் கேள்விக்கும் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா?

ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்காக நாடு முழுவதும் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் 31 இடங்களில் நான்கைத் தவிர, மற்றவையெல்லாம் கார்ப்பரேட்டுகளுக்கும் அந்நிய கம்பெனிகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 15 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம். தேவைப்பட்டால் நீட்டிக்கலாம். இவர்கள் எடுக்கின்ற எண்ணெய் எரிவாயுவை உலக சந்தை விலையில் எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் விற்க உரிமை உண்டு. அந்த விலையில்தான் இந்திய அரசும் வாங்க வேண்டும் என்பது ஒப்பந்தம்.

நெடுவாசல் மண்ணில் துளை போட்டு ஆய்வு செய்ய முடிந்த ஓ.என்.ஜி.சி.யிடம், எரிவாயு எடுப்பதற்குப் பணமில்லையாம். கர்நாடகாவைச் சேர்ந்த ஒரு பாரதிய ஜனதா எம்.பி.யிடம் பணம் இருக்கிறதாம், அதனால் கொடுத்தார்களாம். அவர் 500 பேருக்கு வேலை கொடுப்பாராம். தமிழக அரசுக்கு மொத்தமாக 40 கோடி ரூபாய் ராயல்டி கொடுப்பாராம்.

சங்கிலித்திருடனின் மேற்படி நியாயத்தின்படி பெண்ணின் கழுத்தில் நகை ''சும்மா'' தொங்குவதும், பாரதிய ஜனதாவைச் சார்ந்த கார்ப்பரேட் முதலாளியால் கொள்ளையிட முடியாமல் நெடுவாசல் வயலுக்கு அடியில் மீத்தேனும் ஷேல் வாயுவும் ''சும்மா'' கிடப்பதும், பி.ஆர்.பி.க்குப் பயன்படாமல் மலைகள் ''சும்மா'' நிற்பதும், கோக் பெப்சி நிறுவனங்களின் பாட்டிலுக்குள் அடைபடாமல் தாமிரபரணி ஆறு ''சும்மா'' ஓடுவதும் குற்றம். இவற்றை விற்றுக் காசாக்க முடியாமல் தடுப்பவர்கள் தேசத் துரோகிகள், பிரிவினைவாதிகள், நக்சலைட்டுகள்.

கூடங்குளம் அணு உலையை எதிர்த்து இடிந்தகரை பகுதியில் மீனவ மக்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம். (கோப்புப் படம்)



இது திருட்டு என்பதைப் புரிந்து கொள்ள ஏழாம் அறிவு எதுவும் தேவையில்லை. இது கார்ப்பரேட்

முதலாளிகளின் கூலிப்படையாக இருந்து மத்திய, மாநில அரசுகள் நடத்தும் திருட்டு. இதுதான் நாம் கவனிக்க வேண்டிய முதன்மையான விசயம்.

''திருடுவது சரி'' என்று அரசாங்கமோ நீதிமன்றமோ கூறவியலாது என்பதனால், திருட்டுக்குப் பெயரை மாற்றி ''வளர்ச்சி'' என்று கவுரவமாக அழைக்கிறார்கள். ''வளர்ச்சி அவசியமானதுதான். ஆனால், அதை அடையும் முறை சரியாக இருக்கவேண்டும்'' என்று விவாதம் நடத்துகிறார்கள்.

திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிப்பதற்கு முன்னால், மக்களின் அச்சத்தைப் போக்கி, அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டுமாம். அதாவது, கழுத்துச் சங்கிலியை கழற்றித் தருவதன் நன்மையை, அதனால் ஏற்படப் போகின்ற பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றியெல்லாம் அந்தப் பெண்ணுக்கு விளக்கி, மனப்பூர்வமாகக் கழற்றி கொடுக்க வைத்திருக்க வேண்டுமாம். மக்களின் ஒப்புதலோடு ஹைட்ரோ கார்பன் திட்டத்தை நிறைவேற்றுதல் என்று இதற்குப் பெயர்.

> திருடனை மக்கள் பிரதிநிதி என்று
> இன்னமும் நம்பிக்கோண்டிருந்தால்,
> அது நம்புகிறவர்களின் பிழை.
> ''நாங்கள் திருடர்கள்தான்''
> என்று அவர்கள் பலமுறை
> நிரூபித்திருக்கிறார்கள்.
> சிங்கூர், கலிங்கா நகர், கூடங்குளம்
> ஆகியவற்றின் வரிசையில்
> இப்போது நெடுவாசல்.

பறிகொடுப்பவனின் ஒப்புதலோடு திருட்டு, அடிமையின் ஒப்புதலோடு ஆதிக்கம்! ஒப்புக்கொள்ள மறுத்தால்? ''பிடுங்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு'' *(act of state)* என்று எச்சரிக்கிறார் பாரதிய ஜனதாவின் வக்கீல் பா.ராகவன். ''ஒவ்வொன்றுக்கும் மக்களிடம் ஒப்புதல் வாங்க முடியுமா?'' என்கிறார் வானதி சீனிவாசன். ''ஒருமுறை ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுத்து விட்டால், எண்ணியதை எண்ணியபடி கொள்ளையிடும் உரிமை அரசுக்கு உண்டு'' என்பதுதான் இவர்கள் கூறவரும் நியாயம். தாலி கட்டிய ஆண் எடுத்துக் கொள்ளும் தாம்பத்திய ''உரிமை''யைப் (வல்லுறவு) போன்ற நியாயம்!

''ஒவ்வொன்றுக்கும் போராடிக் கொண்டிருக்க முடியுமா?'' என்று சமூக ஊடகத்தில் கேள்வி எழுப்பிய அந்தப் பெண்ணின் ஆதங்கத்துக்கு, ''ஒவ்வொன்றுக்கும் ஒப்புதல் வாங்க முடியுமா?'' என்ற வானதி அம்மையாரின் திமிர்ப் பேச்சுதான் பதில். இது வாழ்வாதாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயலும் மக்களுக்கும் திருடனுக்கும் இடையில் நடக்கும் போராட்டம். திருடனை மக்கள் பிரதிநிதி என்றும் சட்டபூர்வமான அரசமைப்பு என்றும் இன்னமும் நம்பிக் கொண்டிருந்தால் அது நம்புகிறவர்களின் பிழை. ''நாங்கள் திருடர்கள்தான்'' என்று அவர்கள் பல முறை நிரூபித்திருக்கிறார்கள். சிங்கூர், கலிங்கா நகர், கூடங்குளம் ஆகியவற்றின் வரிசையில் இப்போது நெடுவாசல்.

• ❍ •

இது ''திருட்டு'' என்ற உண்மையை மறைப்பதற்கான முதல் கவசம் ''வளர்ச்சி'' என்ற வாதம். இரண்டாவது கவசம் ''அறிவியல்''. நிலத்தடி நீரும் சூழலும் அழிந்து, விளைநிலமெல்லாம் பாலைவனமாகும் என்று அஞ்சுகிறான் விவசாயி. இரண்டாயிரம் ஆண்டு விவசாயப் பாரம்பரியம் கொண்ட அந்த தஞ்சை உழவனைப் பார்த்து ''நீ விஞ்ஞானியா?'' என்று கேட்கிறார் பொன்னார்.

இராமேசுவரம் கடலுக்கடியில் இருக்கும் மணல் திட்டுக்கு ராமர் பாலம் என்று பெயர் சூட்டி, சேதுக் கால்வாய் திட்டத்தை பாரதிய ஜனதா தடுத்தது. ''ராமன் கட்டிய பாலம் என்கிறீர்களே, ராமன் என்ன எஞ்சினீயரா?'' என்று கருணாநிதி கேட்டவுடன், ''தலையை வெட்டுவேன்'' என்றார் பா.ஜ.க.வைச் சார்ந்த வேதாந்தி என்ற சாமியார் எம்.பி. மணல் திட்டை அழித்தால் தலையை வெட்டலாமெனில், விளைநிலத்தை அழிப்பவனது உறுப்புகளில் எதை வெட்டலாம் என்று பொன்னார்தான் சொல்ல வேண்டும். நெடுவாசல் என்பது இயற்கை உருவாக்கிய மணல் திட்டல்ல, விவசாயிகளின் வியர்வை உருவாக்கிய விளைநிலம். அந்த உழவர்களைப் பார்த்து, ''நீ என்ன விஞ்ஞானியா?'' என்று கேட்கும் மனிதருடைய நாக்கு சோறு தின்னும் நாக்குதானா என்பதையும் விசாரித்துத்தான் பார்க்க வேண்டும்.

எந்த விஞ்ஞானி ராமன் பாலத்தையும் ராமஜென்ம பூமியையும் ஒப்புக்கொண்டான்? பா.ஜ.க.வுக்கும் விஞ்ஞானத்துக்கும் என்ன தொடர்பு? ''மகாபாரத காலத்திலேயே மரபணு விஞ்ஞானம் இருந்தது, பிளாஸ்டிக் சர்ஜரி இருந்ததற்கு பிள்ளையாரே சாட்சி'' என்று மோடிஜியின் வாயிலிருந்து பிரிந்த மீத்தேன் வாயுவை எதிர்கொள்ள முடியாமல், இந்திய விஞ்ஞானிகள் பலர் சுருண்டு விழவில்லையா? அரசியலுக்கு அஞ்ஞானம், பொருளாதாரத்துக்கு விஞ்ஞானமா?

''நீரியல் விரிசல் முறையைக் கையாண்டால் சூழல் நஞ்சாகும், நிலத்தடி நீர் அழியும், விளைநிலம் பாலைவன

மைய அரசு தமிழகத்தின் மீது ஏவிவிட்டுள்ள மற்றொரு பேரழிவுத் திட்டமான நியூட்ரினோ ஆய்வு மையம் அமைப்பதற்குக் கையகப்படுத்தப்பட்டுள்ள பகுதி.



மாகும்'' என்பது அனுபவபூர்வமான உண்மை. இந்த உண்மையைச் சொல்வதற்குப் பத்து விஞ்ஞானிகள் இருந்தால், ''எந்த ஆபத்தும் இல்லை'' என்று சொல்வதற்கு மோடி இருபது விஞ்ஞானிகளை கையில் வைத்திருப்பார். ''அணு மின்சாரம்தான் பசுமை ஆற்றல்'' (green energy) என்று சாதிப்பதற்கும், ''கதிர் வீச்சால் புற்றுநோய் வராது'' என்று சத்தியம் செய்வதற்கும் விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் தயாராக இருந்ததை, நாம் கூடங்குளம் போராட்டத்தின்போது பார்க்கவில்லையா?

நேற்றைய அறிவியலின் அவதானிப்பை இன்றைய அறிவியல் மறுக்கலாம். அறிவியலாளர்களிடையே கருத்து வேறுபாடும் இருக்கலாம். பிரச்சினை அதுவல்ல. நெடுவாசல் போராட்டத்தில் மக்கள் எழுப்பும் கேள்வி, அறிவியலின் நம்பகத்தன்மையைப் பற்றியதல்ல. அறிவியலாளர்கள், வல்லுநர்கள், பொறியாளர்கள் எனப்படுவோரின் நம்பகத்தன்மை பற்றியது. சுருங்கக் கூறின், இந்த அரசமைப்பின் நம்பகத்தன்மை பற்றியது.

என்று ''அம்மா'''' மீது சத்தியம் செய்கிறார்கள் பொதுப்பணித்துறையின் பொறியாளர்கள். பூமிக்கு மேலே எல்லோருடைய கண்ணுக்கும் தெரிகின்ற 30 அடி பள்ளத்தை 3 அடி என்று சாதிக்கும் பொறியாளர்கள், பூமிக்கு கீழே உள்ள நிலத்தடி நீர் பாதுகாப்பாக இருப்பதாகச் சான்றிதழ் தருகிறார்களாம், அதை விவசாயி நம்பவேண்டுமாம்.

நெடுவாசலில் தோண்டப் போவது எத்தனை அடி? எடுக்கப்போவது எரிவாயுவா, எண்ணெயா, மீத்தேனா, ஷேல் வாயுவா? எதுவும் சொல்லவில்லை. ஷேல் வாயு எடுப்பதுதான் அவர்களுடைய திட்டம். அதை மறைப்பதற்குத்தான் ஹைட்ரோ கார்பன் என்ற பித்தலாட்டம். எவ்வளவு எடுப்பார்கள்? எவ்வளவு கணக்குக் காட்டுவார்கள்? யாருக்கும் தெரியாது. தெரிந்து கொள்ளவும் முடியாது.

எரிவாயுக் கிணறு அமைந்துள்ள நரிமணத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் நிலங்கள் தரிசாகிவிட்டன, மக்கள் பல விதமான தோல் நோய்களால், புற்றுநோயால் அவதிப்படுகிறார்கள் என்றெல்லாம் தொலைக்காட்சிகளிலேயே வீடியோ ஆதாரத்துடன் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

இருப்பினும், ''நரிமணம் சுற்றுவட்டாரத்தில் நிலத்தடி நீருக்கு எந்த பாதிப்பும் இல்லை'' என்று தமிழக அரசின் பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளர் கொடுத்த சான்றிதழைக் கையில் வைத்துக் கொண்டு, ''எந்த பாதிப்பும் கிடையாது'' என்று கூச்சல் எழுப்புகிறார்கள் பாரதிய ஜனதாக்காரர்கள்.

பொதுப்பணித்துறையின் யோக்கியதை என்ன? காவிரி, தாமிரபரணி, பாலாறு, வெள்ளாறு உள்ளிட்ட தமிழகத்தின் ஆறுகள் அனைத்திலும் எடப்பாடி, சேகர் ரெட்டி கும்பல் 30 அடி ஆழத்துக்கு மணலை அள்ளியிருக்கிறது என்பது தமிழகம் அறிந்த உண்மை. இருப்பினும், ''சேகர் ரெட்டி 3 அடி தான் அள்ளியிருக்கிறார்''

> சங்கிலித்திருடன் அறுத்துப் போக முடியாமல் பெண்ணின் கழுத்தில் நகை ''சும்மா'' தொங்குவதும், பாரதிய ஜனதாவைச் சார்ந்த கார்ப்பரேட் முதலாளியால் கொள்ளையிட முடியாமல் நெடுவாசல் வயலுக்கு அடியில் மீத்தேனும் ஷேல் வாயுவும் ''சும்மா'' கிடப்பதும், பி.ஆர்.பி.க்குப் பயன்படாமல் மலைகள் ''சும்மா'' நிற்பதும், கோக் பெப்சி நிறுவனங்களின் பாட்டிலுக்குள் அடைபடாமல் தாமிரபரணி ஆறு ''சும்மா'' ஓடுவதும் குற்றம்.

ஆற்று மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, தாது மணல் கொள்ளை எதற்காவது கணக்கு உண்டா? பொதுப்பணி, சுற்றுச்சூழல், வருவாய், வனம், தொல்லியல், நீர்ப்பாசனம் என்று சகலவிதமான துறை வல்லுநர்களின் உதவியோடுதான் பல லட்சம் டன்கள் கடத்தப்பட்டன, கடத்தப்படுகின்றன. இயற்கை வளங்களைப் பாதுகாக்கப் பொறுப்பேற்றுள்ள துறைகள்தான் அவற்றை சூறையாடத் துணைநிற்கின்றன பெல்லாரி ரெட்டி சகோதரர்கள் கணக்கு காட்டாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த இரும்புக் கனிமத்தின் அளவு மட்டும் ஒரு கோடி டன். அவர்தான் கர்நாடக பாரதிய ஜனதாக் கட்சியின் ஆதாரத்தூண். இந்த யோக்கியர்கள்தான் மோடி அரசாங்கத்தை நம்பச் சொல்கிறார்கள்.

''15 ஆண்டுகளுக்கு முன் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மண்ணெண்ணெய் எடுக்கப்போகிறோம் என்று சொல்லி என் நிலத்தை இரண்டாண்டு குத்தகைக்குக் கட்டாயப்படுத்தி வாங்கினார்கள். இப்போது ஹைட்ரோ கார்பன் எடுக்கப்போகிறோம் என்கிறார்கள். என்னைக் கேட்காமலேயே என் நிலத்தை யாரோ ஒரு கார்ப்பரேட் கம்பெனி லாபம் சம்பாதிப்பதற்காக 15 ஆண்டு குத்தகைக்குக் கொடுத்



திருக்கிறார்களே, இது என்ன நியாயம்? அன்று மண்ணெண்ணெய், இன்று ஹைட்ரோ கார்பனா? இந்த அநீதியை நியாயப் படுத்தும் ராகவன் அவர்களே, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரும் உங்கள் பெயர் ராகவன் தானே!'' என்று தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் பா.ஜ.க. பிரதிநிதியை எள்ளி நகையாடினார் சந்திரபோஸ் என்ற விவசாயி.



ஓ.என்.ஜி.சி.நிறுவனம்எண்ணெய்த்துரப்பணவுசெய்வதைஎதிர்த்து,நாகப்பட்டிணம் மாவட்டம், குத்தாலத்தில் நடந்த முற்றுகைப் போராட்டம். (கோப்புப் படம்)

• ○ •

இதற்கெல்லாம் பா.ஜ.க. நாக்குமாறிகள் வெட்கப்பட மாட்டார்கள். அவர்கள் விவாதம் நடத்துவதன் நோக்கமே வேறு. சென்ற கணம் வரை ''கழுத்துச் சங்கிலி அந்தப் பெண்ணுடைய உடைமை'' என்று ஊரார் எண்ணிக்கொண்டிருந்தனர். இப்போது ''அறுக்கலாமா, கூடாதா?'' என்ற இடத்துக்கு விவாதத்தைக் கொண்டு வந்து விட்டார்கள் பாரதிய ஜனதாக்காரர்கள்.

> நெடுவாசல் போராட்டத்தில் மக்கள் எழுப்பும் கேள்வி, அறிவியலின் நம்பகத்தன்மையைப் பற்றியதல்ல. அறிவியலாளர்கள், வல்லுநர்கள், பொறியாளர்கள் எனப்படுவோரின் நம்பகத்தன்மை பற்றியது. சுருங்கக் கூறின், இந்த அரசமைப்பின் நம்பகத்தன்மை பற்றியது.

பாபர் மசூதி பிரச்சினை நினைவிருக்கிறதா? ''மசூதிக்கு அடியில் கோயில் இருக்கிறது'' என்றுதான் முதலில் ஆரம்பித்தார்கள். அது மசூதிதான் என்ற கருத்து மெல்ல விலகி, ''மசூதியா, கோயிலா?'' என்ற விவாதம் தொடங்கியது. பிறகு, ''தோண்டிப் பார்த்தால்தானே இருக்கிறதா, இல்லையா என்று தெரியும்'' என்று ''நியாயம்'' பேசினார்கள். திடீரென்று ஒரு நாள் இடித்து விட்டார்கள். நெடுவாசலுக்கு அடியில் ஹைட்ரோ கார்பன் இருக்கிறது என்று கதையைத் தொடங்கியிருக்கிறார்கள். அதே அயோத்தி கதைதான். இசுலாமியர்களின் இடத்தில் தமிழ்நாட்டு விவசாயிகள் என்பதுதான் வித்தியாசம்.

மற்றபடி, சங்கிலியை அறுப்பதுதான் திருடனின் நோக்கம். இதை ஒருபோதும் மறந்து விடலாகாது. மரியாதைக்குரிய பாரதப் பிரதமரும் ஹிந்து ஹ்ருதய சாம்ராட்டுமான திருவாளர் நரேந்திர தாமோதர் மோடிஜி அவர்களை ஒரு சங்கிலித் திருடனுடன் ஒப்பிடுவது தேசத்துரோகம் என்று தேச பக்தர்கள் சிலர் கருதக் கூடும். இந்த ஒப்பீட்டுக்கு தீய உள்நோக்கம் ஏதும் இல்லை. இது ஐ.எஸ்.ஓ. 2001 தரச்சான்று பெற்ற உண்மை.

கருப்புப் பண ஒழிப்பு என்ற பெயரில், மக்களின் கையில் இருந்த பணத்தையெல்லாம் பிடுங்கினார் மோடி. கைப்பற்றப்பட்ட கருப்புப் பணத்தை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப் போகிறோம் என்று ஆசை காட்டினார். நமது பணம் அம்பானிகள், அதானிகளுக்கு பிரித்துக் கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். இதற்குப் பெயர் ''கருப்புப்பண ஒழிப்பு'' நடவடிக்கையாம்.

சந்திரபோஸ்களின் நிலத்தை சித்தேஸ்வராவுக்கும் அம்பானிகளுக்கும் கொடுக்கும் நடவடிக்கைக்கு *HELP* என்று பெயர் வைத்திருக்கிறார் மோடி. அதாவது *Hydrocarbon Exploration and Licencing Policy.* மக்களுக்கு உதவுவது என்ற பெயரில் கார்ப்பரேட்டுகளுக்கு உதவும் இந்த நடவடிக்கை, ''சும்மா'' கிடக்கும் எண்ணெய் வயல்களை கார்ப்பரேட்டுகளுக்கு தூக்கிக் கொடுக்கிறது. அவற்றை விற்றுப் பணமாக்கி (*monetizing the oil fields*) பொருளாதாரத்தை வளர்க்குமாறு கார்ப்பரேட்டுகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறார் மோடி.

அடுத்து வரவிருப்பது, சங்கிலி அறுப்பு நடவடிக்கை. ''தங்கத்தை எதற்கு 'சும்மா' பீரோவில் வைத்திருக்கிறீர்கள். அதை வங்கியிடம் கொடுங்கள். பொருளாதாரத்தை வளர்க்கிறோம். தங்கப் பத்திரம் தருகிறோம்'' என்றவாறு 2015 தீபாவளிக்கு முந்தைய ''மன் கி பாத்'' உரையில் பேசியிருந்தார் மோடி. எதுவொன்றும் சும்மா இருப்பது மோடிஜிக்கு பிடிக்காது. அது சும்மா இருக்கும் பணமானாலும் சரி, சும்மா இருக்கும் நிலமானாலும் சரி, சும்மா இருக்கும் நகையானாலும் சரி.

பணம் பிடுங்கப்பட்டுவிட்டது. விவசாயிகளே, நிலம் பத்திரம்! தாய்மார்களே தாலி பத்திரம்!

● மருதையன்

# குற்றவாளி ஜெயலலிதா:

# குப்பைக்கு எதற்கு ஒளிவட்டம்?

**தனது அரசியல் வாழ்க்கை முழுவதும் பொதுச் சொத்துக்களை அபகரித்துக் கொள்ளும் கொள்ளைக்காரியாக, சதிகாரியாக, மேல்தட்டுப் பொறுக்கியாக, ரவுடியாகவே வாழ்ந்து மறைந்தவர்தான் ஜெயலலிதா.**

ஜெயலலிதா இன்று உயிரோடு இருந்திருந்தால், சசிகலாவோடு அவரும் பரப்பன அக்ரஹாரா சிறைக் கம்பிகளை எண்ண வேண்டியிருந்திருக்கும். ஜெயில் களியைத் தின்ன வேண்டிய தண்டனையிலிருந்து ஜெயாவை மரணம் காப்பாற்றிவிட்டாலும், அவர் தமிழகச் சொத்துக்களை வளைத்துப் போட்டுக்கொண்ட ஊழல் குற்றவாளி, சதிகாரி என்ற உண்மையை அந்த மரணத்தாலும் மூடிமறைத்துவிட முடியவில்லை.

ஜெயா-சசி கும்பலின் ஊழல், கொள்ளை, கிரிமினல் சதித்தனங்கள் குறித்து, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ம.க.இ.க., உள்ளிட்ட புரட்சிகர ஜனநாயக சக்திகளும், சமூக அக்கறை கொண்ட சில தனிநபர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் கூறி வந்தவை, இப்பொழுது உச்சநீதி மன்றத் தீர்ப்பு வழியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு வேறு மாதிரியாக வந்திருந்தாலும், ஜெயா-சசி இணை கடைந்தெடுத்த கிரிமினல்-மாஃபியா கும்பல், தமிழகத்தைக் கவ்வியிருந்த மலைப்பாம்பு என்ற உண்மை மறைந்து போயிருக்காது.

ஜெயாவின் மரணம், தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நல்வாய்ப்பை அவருக்கு வழங்கியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அ.தி.மு.க.வைச் சேர்ந்த இரண்டு கோஷ்டிகளுக்கும், ஊடகங்களுக்கும், தொலைக்காட்சி விவாதங்களில் பங்குபெறும் ‘‘நிலைய வித்வான்களுக்கும்’’ ஜெயாவின் குற்றப் பின்னணி பற்றிப் பேச வேண்டிய தர்ம சங்கடத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் நல்வாய்ப்பையும் சேர்த்தே வழங்கிவிட்டது.

‘‘சசிகலாவின் கூடாநட்பினால்தான் ஜெயாவிற்கு அவப்பெயர் ஏற்பட்டுவிட்டது; உச்சநீதி மன்றத் தீர்ப்பில் மற்ற மூவர்தான் தண்டிக்கப்பட்டுள்ளனர், ஜெயா விடுவிக்கப்பட்டுவிட்டார்; தமிழக மக்களுக்கு ஜெயலலிதா மீதிருந்த மதிப்பும் மரியாதையும் இந்தத் தீர்ப்பினால் மங்கிப் போய்விடவில்லை; ஒவ்வொரு நீதிமன்றமும் ஒவ்வொரு விதமாகத் தீர்ப்பளிப்பதால், உச்சநீதி மன்றத் தீர்ப்பை இறுதியானதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை’’ எனப் பலவாறு வாதங்களை அடுக்கி, ஜெயாவை உத்தமியாகக் காட்டுவதை அ.தி.மு.க. அடிமைகளும், ஜெயாவின் ஊதுகுழல்களும் திறமையாகச் செய்து வருகின்றன.

ஆனால், உச்சநீதி மன்றத் தீர்ப்போ, சொத்துக்களைச் சட்டவிரோதமாகவும் முறைகேடான வழிகளிலும் வாங்கிக் குவித்த இந்த கிரிமினல் வழக்கின் மூளையாகச் செயல்பட்டிருப்பது சசிகலா அல்ல, ஜெயலலிதாதான் என உறுதிபடுத்தியிருக்கிறது.

- சொத்துக்களை வாங்கி குவிக்கவும், அச்சொத்துக்களை பினாமி லெட்டர் பேடு நிறுவனங்களின் பெயரில் காட்டவும் ஆழமான சதித் திட்டம் இவ்வழக்கில் தீட்டப்பட்டிருக்கிறது. இறந்து போன ஜெயலலிதாவும், சசிகலா உள்ளிட்டு மற்ற மூவரும், ஜெயலலிதா முறைகேடான வழிகளில் சேர்த்த பணத்தைக் கொண்டு, லெட்டர் பேடு நிறுவனங்களின் பேரில் சொத்துக்களை வாங்கிக் குவிப்பதற்கு போயசு தோட்டத்தில் இருந்துகொண்டு ஒன்றன் பின் ஒன்றாகப் பல்வேறு சதித் திட்டங்களை தீட்டியுள்ளனர்.

- இந்த வழக்கின் முதல் குற்றவாளி ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு குற்றவாளிகளும் சதித் திட்டம் தீட்டி, அதன் அடிப்படையில், ஜெயலலிதா வருமானத்துக்கு மீறிய வகையில் குவித்த சொத்துக்களை, மற்ற மூவரும் தங்களுக்குள் பிரித்துக்கொண்டதோடு, பினாமி நிறுவனங்களின் பெயரிலும் மாற்றிக் கொண்டு, ஜெயலலிதாவின் முகமூடியாகச் செயல்பட்டிருப்பது சாட்சியங்களின் மூலம் நிறுவப்பட்டிருக்கிறது.

- இந்த லெட்டர் பேடு நிறுவனங்கள் எல்லாம் ஜெயலலிதாவின் வீட்டில் இருந்துதான் இயங்கி உள்ளன; இதெல்லாம் தனக்கு தெரியாது; சசிகலா, சுதாகரன், இளவரசியின் நடவடிக்கைகள் பற்றித் தனக்கு தெரியாது என ஜெயலலிதா பாசாங்கு செய்வதை ஏற்க முடியாது.

சொத்துக் குவிப்பு வழக்கின் மூளையாகச் செயல்பட்ட சதிகாரி ஜெயா.



● ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தைப் பயன்படுத்தித்தான் சொத்துக்கள் வாங்கி குவிக்கப்பட்டுள்ளன. இதற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனக் கணக்கில் புழங்கியுள்ளன. இத்தகைய சொத்துக் குவிப்பிற்கும் தனக்கும் தொடர்பில்லை என்று காட்டிக் கொள்ளும் நோக்கில்தான், ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தை நிர்வகிக்கும் அதிகாரத்தை (பவர் ஆஃப் ஆட்டர்னி) சசிகலாவுக்குக் கொடுத்திருக்கிறார், ஜெயலலிதா.

● குற்றவாளிகள் நால்வரும் போயசு கார்டன் இல்லத்தில் சமூக உறவின் அடிப்படையிலும் சேர்ந்து வாழவில்லை. முதல் குற்றவாளி ஜெயலலிதா, மற்ற மூவரையும் மனிதாபிமான அடிப்படையிலும் தனது வீட்டில் தங்க அனுமதிக்கவில்லை. மாறாக, முதல் குற்றவாளி முறைகேடாகச் சேர்த்த பணத்தில் குவித்த சொத்துக்களை, மற்ற மூன்று குற்றவாளிகளின் பெயர்களில் பிரித்துக்கொண்டு நிர்வகிப்பது என்ற சதித் திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்தில் மட்டுமே, முதல் குற்றவாளி ஜெயலலிதா, மற்ற மூன்று குற்றவாளிகளையும் தனது இல்லத்தில் இலவசமாகத் தங்கிக் கொள்ள அனுமதித்திருக்கிறார்.

● சொத்து சம்பாதிப்பதில் இவர்களுக்கு எந்த விதமான குற்ற உணர்ச்சியும் இல்லை. இவர்களிடம் பேராசை மட்டுமே இருந்துள்ளது. இவர்களது தந்திரங்களைப் பார்க்கும்போது அதிர்ச்சியாக இருக்கிறது. இவர்களை அனுமதித்தால் நாட்டில் அமைதி குலைந்துவிடும். இவர்களை அனுமதித்தால் நியாய தர்மம் பார்ப்பவர்கள் நாட்டில் சிறுபான்மை ஆகிவிடுவார்கள்.

- இவை அனைத்தும் பரலோகம் போய்விட்ட ஜெயலலிதாவின் பங்கு குறித்து உச்சநீதி மன்றத் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கும் கண்டுபிடிப்புகள் (findings). மேலும், உச்சநீதி மன்ற நீதிபதிகள் பினாகி சந்திர கோஷும், அமிதவராயும் ஜெயலலிதா மரணம் அடைவதற்கு முன்பாகவே, இந்த வழக்கில் அவரைக் குற்றவாளியாகத் தீர்ப்பளித்த பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹாவின் தீர்ப்பை முழுமையாக உறுதிப்படுத்தியுள்ளனர். குன்ஹாவின் தீர்ப்பு ஜெயலலிதாவின் சதிகளையும், கிரிமினல்தனங்களையும் அசைக்க முடியாத ஆதாரங்களோடும் சாட்சியங்களோடும் நிரூபித்திருக்கிறது.

குன்ஹா அளித்த தீர்ப்பில், இவர்களின் நிறுவனங்கள் 3 ஆயிரம் ஏக்கர் நிலங்களைத் தங்களுக்குச் சொந்தமாக வைத்துள்ளன. அந்த மூவாயிரம் ஏக்கர் நிலமும் எந்த வருமானத்தில் வாங்கப்பட்டது என்பதைக் குற்றவாளிகளால் சொல்ல முடியவில்லை.

● வடக்கு கடற்கரை சப்-ரிஜிஸ்ட்ரார், தோட்டக்கலைத் துறை அதிகாரி ராதாகிருஷ்ணன் ஆகியோர் அளித்த சாட்சியத்தில், அந்த இருவரும் அவர்களது மேலதிகாரிகளின் உத்தரவுப்படி ஜெயலலிதாவின் போயசு தோட்ட வீட்டுக்கு வரவழைக்கப்பட்டு, விதிமுறைகளைப் பின்பற்றாமல் பத்திரங்களைப் பதிவு செய்துள்ளனர். அவர்கள் பதிவு செய்த நிலங்களின் பத்திரங்கள் அனைத்தும் அடிமாட்டு விலைக்குப் பதியப்பட்டுள்ளன. மிகவும் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால், அதில் ஆறு பத்திரங்கள் யார் வாங்குகிறார் என்ற விவரம் இல்லாமல், பெயர்கூடக் குறிப்பிடாமல் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்போது அவை யாருடைய அனுபவத்தில் உள்ளது எனப் பார்த்தால், அவை அனைத்தும் ஜெயலலிதாவுக்காக வாங்கப்பட்டுள்ளன என்பது தெரிய வந்திருக்கிறது.

● சசிகலாவுக்கும் இளவரசிக்கும் ஆடிட்டராக இருந்த பாலாஜி அளித்த வாக்குமூலத்தில், ‘‘இந்த நிறுவனங்கள் எந்தக் காலக்கட்டத்திலும் எதையும் உற்பத்தி செய்யவில்லை. பொருட்களை வாங்கி விற்கவும் இல்லை. ஆனால், நிறுவனங்களின் கணக்குகளில் மட்டும் பணப் பரிவர்த்தனைகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன’’ எனக் கூறியிருக்கிறார்.

● நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிப் பரிவர்த்தனை விவரங்களைப் பார்க்கும்போது மலைப்பாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது. மூலதனமே இல்லாத ரப்பர் ஸ்டாம்ப் நிறுவனங்களும், எந்த வியாபாரத்திலும் ஈடுபடாத நிறுவனங்களும் ஒவ்வொரு முறையும் பல ஆயிரங்களிலும் இலட்சங்களிலும் பணப் பரிவர்த்தனை செய்துள்ளன. இப்படிப் பணத்தைச் சுற்றி வளைத்துப் போட்டு எடுப்பதற்காகவே, 1991-க்கு முன்புவரை 12 வங்கிக் கணக்குகளை மட்டுமே வைத்திருந்த ஜெயலலிதாவும் சசிகலாவும், அதன் பிறகு 52 வங்கிக் கணக்குகளைத் தொடங்கியுள்ளனர்.

முதல் குற்றவாளி முறைகேடாகச் சேர்த்த பணத்தில் குவித்த சொத்துக்களை, மற்ற மூன்று குற்றவாளிகளின் பெயர்களில் பிரித்துக்கொண்டு நிர்வகிப்பது என்ற சதித் திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்தில் மட்டுமே, முதல் குற்றவாளி ஜெயலலிதா, மற்ற மூன்று குற்றவாளிகளையும் தனது இல்லத்தில் இலவசமாகத் தங்கிக்கொள்ள அனுமதித்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் கொள்ளைகளுக்கு உடந்தையாகவும், அவரின் முறைகேடான சொத்துக்களுக்கு பினாமியாகவும் இருந்த திருட்டுக் கும்பல்: சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி.





1991-96 காலக் கட்டத்தில் ஜெயலலிதா முறைகேடான வழியில் சம்பாதித்து,
போயசு தோட்டத்தில் பதுக்கி வைத்திருந்த தங்க, வைர நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களின் ஒரு பகுதி.

● போயசு கார்டனில் வேலை பார்த்த கார் டிரைவர் ஜெயராமனிடம் ஒவ்வொரு முறையும் பை மற்றும் சூட்கேஸில் இலட்சக்கணக்கான ரூபாய்களை வைத்து, நிரப்பப்பட்ட வங்கி சலான்களைக் கொடுத்து வங்கியில் செலுத்த சசிகலாதான் உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்தப் பணத்தை இவர்கள் நடத்தும் நிறுவனத்தின் கணக்குகளில் வரவு வைத்து, அவற்றை நிறுவனத்தின் பணமாக மாற்றி, அதன் பிறகு நிறுவனத்தில் இருந்து தங்கள் பெயர்களில் உள்ள வங்கிக் கணக்குக்கு மாற்றிக் கொண்டுள்ளனர்.

● ஜெயலலிதாவிடம் இருந்து அரசு தரப்பு கைப்பற்றிய நகைகளின் எடை 27,588 கிராம். இதில், ஜெயலலிதா பதவிக்கு வருவதற்கு முன்பே அவரிடம் இருந்த நகைகள் 7,040 கிராம். மீதமுள்ள 20,548 கிராம் எடையுள்ள தங்கம் பதவிக் காலத்தில் சம்பாதித்தவை என்றாகிறது. இத்துணை ஆயிரம் எடையுள்ள தங்கம் தனது வீட்டுக்கு எப்படி வந்தது என்பதை ஜெயலலிதாவால் கடைசி வரை சொல்லவே முடியவில்லை.

● ஜெயலலிதாவிடம் இருந்த வைரங்களின் மதிப்பு 1,62,61,20 ரூபாய். அதனைத் தங்க நகைகளின் மதிப்போடு சேர்த்துக் கணக்கிட்டால், 2,51,59,144 ரூபாய் வருகிறது. இத்தனை மதிப்புடைய தங்கத்தாலும், வைரத்தாலும் இழைக்கப்பட்ட நகைகள் அனைத்தும் ஜெயலலிதாவால் முறைகேடான வழியில் சம்பாதிக்கப்பட்டது.

தங்க, வைர நகைகள், வீட்டு மனைகள், நிலங்கள், கட்டிடங்கள், கொடநாடு எஸ்டேட், பையனூர், சிறுதாவூர் பங்களாக்கள் என ஜெயா-சசி கும்பல் முறைகேடான வழிகளில் சம்பாதித்த பணம், சொத்துக்களை நுணுக்கமாக ஆராய்ந்துள்ள குன்ஹா, தனது தீர்ப்பில் குற்றவாளிகள் 1991-96 காலக் கட்டத்தில் 53,60,49,954 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை முறைகேடான வழிகளில் ஈட்டியதாக நிரூபித்திருக்கிறார்.

> இறந்து போன ஜெயலலிதாவும், சசிகலா உள்ளிட்டு மற்ற மூவரும், ஜெயலலிதா முறைகேடான வழிகளில் சேர்த்த பணத்தைக் கொண்டு, லெட்டர் பேடு நிறுவனங்களின் பேரில் சொத்துக்களை வாங்கிக் குவிப்பதற்கு போயசு தோட்டத்தில் இருந்துகொண்டு ஒன்றன் பின் ஒன்றாகப் பல்வேறு சதித் திட்டங்களை தீட்டியுள்ளனர்.

வழக்கு தொடர்பான காலக்கட்டத்தில் (1991-96) ஜெயா-சசி கும்பல் முறைகேடான வழிகளில் குவித்த சொத்துக்களின் மதிப்பு இவ்வளவுதானா என்றால், நிச்சயமாக இல்லை. ‘‘இன்னும் நிறைய சொத்துக்கள் வைத்திருக்கின்றனர். எனவே, அவற்றை எல்லாம் விசாரிப்பதற்கு குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 178(2)-ன் படி எனக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். ஆனால், அதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை’’ என்கிறார், சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணை அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற நல்லம்மா நாயுடு. (ஜூ.வி., 22.2.17, பக்.14)

1991-96 காலக் கட்டத்தில், ஜெயா-சசி கும்பல் ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொத்துக்களை மட்டுமா வாங்கிக் குவித்தார்கள்? தமது ஊழல், கொள்ளைகளை அம்பலப்படுத்திய எதிர்க்கட்சியினர், அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் மீதும், கவர்னர், மத்திய அமைச்சர்கள், நீதிபதிகள் உள்ளிட்ட ஆட்சியாளர்கள் மீதும் ரவுடிக் கும்பலை ஏவிவிட்டு வன்முறைத் தாக்குதலை நடத்தியதற்கு ஏராளமான ஆதாரங்களும் சாட்சியங்களும் உள்ளன. இந்த கிரிமினல் குற்றங்கள் தொடர்பாக அக்கும்பல் மீது இதுவரை எந்தவொரு வழக்கும் தொடரப்படவில்லை.

அ.தி.மு.க.வின் 2011-16 ஆட்சிக் காலம் 40 பர்செண்ட் ஆட்சி என்ற அடைமொழியால் குறிப்பிடுமளவிற்கு ஊழலிலும் கொள்ளையிலும் மூழ்கித் திளைத்தது. தாது மணல், ஆற்று மணல், கிரானைட் - என இயற்கை வளங்கள் தொடங்கி முட்டை, பால், மின்சாரக் கொள்முதல் வரை எங்கும் எதிலும் ஊழல், கமிசன் என பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதில் வரலாறே படைத்தது ஜெயா-சசி கும்பல்.

பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்காகவே ஆட்சியையும் கட்சியையும் நடத்தி வந்த ஜெயா, தனது கிரிமினல் குற்றங்களைத் தமிழகத்தின் பாமர

மக்கள் உணர்ந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே, அவர்களைச் சாராய போதையிலும், இலவச போதையிலும் மூழ்கடித்தார். பணத்தை வாரியிறைத்துப் பாமர மக்களின் ஓட்டுக்களை, வழிப்பறித் திருடனைப் போலப் பறித்துக் கொண்டார். இதனையும் மீறித் தன்னை எதிர்த்தவர்கள் மீது அவதூறு வழக்குகளையும், தேசத் துரோக வழக்குகளையும் போட்டு, அவர்களைச் சிறையில் அடைத்தார்.

தனது அரசியல் வாழ்நாள் முழுவதும் பொதுச் சொத்துக்களை அபகரித்துக் கொள்ளும் கொள்ளைக்காரியாக, சதிகாரியாக, மேல்தட்டுப் பொறுக்கியாக, ரவுடியாகவே வாழ்ந்து மறைந்த ஜெயலலிதா, அந்தக் குற்றங்களில் ஒரு சிறு பகுதிக்காகவே தண்டிக்கப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்டதொரு இழிந்த கழிசடையை, தண்டிக்கப்பட்ட குற்றவாளியைத் தமிழகத்தின் அம்மாவாக அ.தி.மு.க. கும்பலும், அக்கட்சியின் துதிபாடிகளும், அவர்களது அரசும் கொண்டாடுவதும் துதி பாடுவதும் தமிழகத்திற்கு நேர்ந்துவிட்ட அவமானம்.

தலைமைச் செயலர், காவல் துறை தலைவர் தொடங்கி அதிகார வர்க்கம் அனைத்தும் குற்றவாளி ஜெயாவின் படத்தின் கீழ் அமர்ந்துகொண்டு நீதி பரிபாலனம் செய்யும் கேலிக்கூத்து நடக்கிறது. சிறையில் அடைக்கப்பட்ட சசிகலாவைச் சந்திப்பதற்குத் தமிழக அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அனுமதி அளிக்கக் கோரி தமிழக போலீசு தலைமையே கர்நாடக சிறைத்துறைக்குக் கடிதம் எழுதும் அசிங்கமும் அரங்கேறுகிறது.

அம்மாவின் வழியில் நடப்பதாகக் கூறப்படும் இந்த ஆட்சியின் சுக்கான், சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்ட சசிகலா, அந்நியச் செலாவணி மோசடி வழக்கில் 28 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட டி.டி.வி. தினகரன், லெக்ஸஸ் கார் இறக்குமதி மோசடி வழக்கை எதிர்கொண்டுவரும் நடராஜன் ஆகிய கிரிமினல் பேர்வழிகளின் கைகளில்தான் உள்ளது.

மேலை நாடுகளில் ஊழல் மற்றும் குற்றம் புரிந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் கைவிலங்கிட்டு இழுத்துச் செல்லப்பட்டுச் சிறைச்சாலையில் அடைக்கப்படுவார்கள். அந்நாடுகளில் குற்றவாளிகள் எவ்வளவு பெரிய செல்வாக்கு மிக்க நபராக இருந்தாலும், எந்த விதமான சலுகையும் மரியாதையும் காட்டப்படாது எனக் கூறுகிறார், ஓய்வுபெற்ற மத்திய உளவுத் துறை அதிகாரி ப.ஸ்ரீ.ராகவன். சீனா உள்ளிட்ட சில நாடுகளில் ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் தூக்கில் தொங்கவிடப்படுகிறார்கள்.

ஆனால், தண்டிக்கப்பட்ட ஜெயா விடயத்தில் என்ன நடக்கிறது? அம்மாவின் வழியிலேயே ஆட்சியை நடத்துவோம் என வெட்கங்கெட்டு அறிவிக்கிறார், சசிகலாவின் பினாமி முதலமைச்சர் பழனிச்சாமி. ஜெயாவின் பெயரில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்கள் இன்னமும் அவரது பெயரிலேயே தொடர்கின்றன. அம்மா இரு சக்கர வாகனத் திட்டம் என்ற பெயரில் புதிய திட்டம் அறிவிக்கப்படுகிறது. தண்டிக்கப்பட்ட குற்றவாளி ஜெயாவின் பிறந்த நாளைத் தமிழக அரசே முன்னின்று கொண்டாடுகிறது. மெரினாவைக் களங்கப்படுத்தும் ஜெயாவின் சமாதியை நினைவிடமாக மாற்ற முயற்சிகள் நடக்கின்றன.



ஜெயலலிதாவிடம் இருந்த வைரங்களின் மதிப்பு 1,62,61,20 ரூபாய். அதனைத் தங்க நகைகளின் மதிப்போடு சேர்த்துக் கணக்கிட்டால், 2,51,59,144 ரூபாய் வருகிறது. இத்தனை மதிப்புடைய தங்கத்தாலும், வைரத்தாலும் இழைக்கப்பட்ட நகைகள் அனைத்தும் ஜெயலலிதாவால் முறைகேடான வழியில் சம்பாதிக்கப்பட்டது.

முதலமைச்சர் நாற்காலி தொடங்கி அனைத்து உயர் பதவிகளிலும் இந்தக் கும்பலின் அடிவருடிகள்தான் உட்கார முடியும் என்பதை உளவுத் துறை ஐ.ஜி. டேவிட்சன் தேவாசீர்வாதம் தூக்கியடிக்கப்பட்ட விதம் உணர்த்துகிறது. சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் ஜார்ஜ், டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன், உளவுப் பிரிவு கூடுதல் ஆணையர் தாமரைக்கண்ணன் உள்ளிட்ட தனது விசுவாசமிக்க ஐ.பி.எஸ்., மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்துக்கொண்டு, மக்களின் எதிர்ப்பையும் மீறி இந்த ஆட்சியை அடுத்த நான்காண்டுகளுக்குத் தொடர்ந்து நடத்திவிட எத்தணிக்கிறது, சசிகலா குடும்பம். சுருக்கமாகச் சொன்னால், எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அமைந்துள்ள அ.தி.மு.க. அரசு, கிரிமினல்களால், கிரிமினல்களுக்காக, கிரிமினல்கள் மூலம் நடத்தப்படும் அரசாகும்.

அம்மா கொடுத்த இலவசப் பொருட்களை வாங்கி அனுபவித்து வரும் தமிழக மக்கள் அம்மாவையும் எதிர்க்க மாட்டார்கள், இந்த அரசையும் எதிர்க்கத் துணிய மாட்டார்கள் என வாதாடி, இந்த மானக்கேட்டை நியாயப்படுத்தி வருகிறது, அ.தி.மு.க. கும்பல். இதன் மூலம் தமிழக மக்களை எவ்வித அறவுணர்ச்சியும் அற்ற, தன்மான உணர்ச்சி இல்லாத சோற்றால் அடித்த பிண்டங்களாக இழிவுபடுத்துகிறது.

 

ஜெயா-சசி கும்பல் அடித்த கொள்ளையின் வெளிப்படையான ஆதாரங்கள்:
கொடநாடு எஸ்டேட் (இடது) சென்னையில் உள்ள மிக நவீன ஜாஸ் திரையரங்கு.

இந்த இழிவை, அவமதிப்பை எப்படித் துடைத்தெறிவது? இந்த இழிவைத் தடுக்கக் கோரித் தலைமைச் செயலரிடம் மனு கொடுக்கிறது, தி.மு.க. வழக்கு தொடர்ந்துள்ளதாக அறிவிக்கிறது, பா.ம.க. சட்டம், நீதிமன்றங்கள் மூலம் இந்த இழிவிற்கு விடிவு கிடைக்குமா என்றால், முந்தைய அனுபவங்கள் இந்த நிறுவனங்களை நம்ப முடியாது என்றே உணர்த்துகின்றன. பரப்பன அக்ரஹாரா சிறையில் ஜெயா அடைபட்டிருந்த நாட்களிலும், அவர் தண்டிக்கப்பட்டதற்கு எதிரான வழக்கு கர்நாடக உயர்நீதி மன்றத்தில் நடந்து கொண்டிருந்த போதும் தமிழகத்தில் என்ன நடந்தது?

**தனது விசுவாசமிக்க ஐ.பி.எஸ்., மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்துக்கொண்டு, மக்களின் எதிர்ப்பையும் மீறி இந்த ஆட்சியை அடுத்த நான்காண்டுகளுக்குத் தொடர்ந்து நடத்திவிட எத்தணிக்கிறது, சசிகலா குடும்பம். சுருக்கமாகச் சொன்னால், எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அமைந்துள்ள அ.தி.மு.க. அரசு, கிரிமினல்களால், கிரிமினல்களுக்காக, கிரிமினல்கள் மூலம் நடத்தப்படும் அரசாகும்.**

இப்பொழுது சசி-தினகரன் இருக்கும் இடத்தில், அப்பொழுது ஜெயா இருந்தார். எடப்பாடி பழனிச்சாமியின் இடத்தில் ஓ.பி.எஸ். இருந்தார். குற்றவாளி ஜெயா போயசு தோட்டத்தில் பதுங்கிக்கொண்டு நடத்திய ஆட்சியை நீதிமன்றம், தேர்தல் ஆணையம் உள்ளிட்ட எந்தவொரு உயர் அதிகார நிறுவனமும் கேள்விக்குள்ளாக்கவில்லை.

ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட ஜெயாவின் சட்டமன்றத் தொகுதியான சீறிரங்கம் தொகுதி காலியாக இருப்பதை உடனடியாக அறிவிக்காமல் வேண்டுமென்றே காலம் தாழ்த்தியது, ''சுதந்திரமான'' தேர்தல் ஆணையம். அரசு அலுவலகங்களிலும் அதன் இணைய தளங்களிலும் ஜெயாவின் படத்தை எடுக்கக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, வாய்தாவுக்கு மேல் வாய்தா என இழுத்தடிக்கப்பட்டது.

ஜெயா தண்டிக்கப்பட்டதைக் கண்டிப்பது என்ற பெயரில் அ.தி.மு.க. ரவுடிகள் நடத்திய வன்முறை குறித்து உச்சநீதி மன்றத்தில் நடந்த விசாரணையில், ''ஜெயாவின் கட்சிக்காரர்கள் கட்டுப்பாடின்றி நடந்து கொள்வதற்கு அவர் என்ன செய்ய முடியும்? அவர்தான் இந்த வன்முறையைத் தூண்டிவிட்டு நடத்தினார் என்பதற்கு ஏதாவது ஆதாரமுண்டா?'' என ஜெயாவின் வக்கீலாகவே மாறி வாதிட்டார், உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி தத்து. ''அம்மா என்பது அனைவரும் பயன்படுத்தும் பொதுவான சொல்தானே'' என அ.தி.மு.க. அடிமையைப் போல விளக்கமளித்த பெருமைமிக்கது சென்னை உயர்நீதி மன்றம்.

ஜனநாயகத்தைத் தாங்கும் நான்காவது தூணாகக் கூறப்படும் ஊடகங்களின் அறவுணர்ச்சியோ நீதிமன்றங்களைவிடக் கேவலமாக இருக்கிறது. ஒருபுறம் உச்சநீதி மன்றத் தீர்ப்பை வரவேற்று எழுதிக் கொண்டு, இன்னொருபுறம் ஜெயாவிற்கு வக்காலத்து வாங்கும் மாமா வேலையையும் திறம்பட நடத்துகின்றன, ஊடகங்கள். குற்றவாளி ஜெயாவின் பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொல்லும் தமிழக அரசின் விளம்பரத்தைக் காசுக்காக முழுப் பக்க அளவில் வெளியிட்ட ஊடகங்களுக்கு (தினமணி, தமிழ் இந்து உள்ளிட்டவை) பொதுவாழ்வில் நேர்மை, தூய்மை குறித்துப் பேசும் தகுதி இருக்க முடியுமா?

இன்றைய அரசியல் அமைப்பு முறை தோற்றுப் போய் நிற்பதை, எந்தச் சட்டம், நீதி, அறம் குறித்துப் பேசுகிறதோ அதற்கு எதிராக இவ்வமைப்பு செயல்படுவதை ஜெயா விவகாரம் துலக்கமாக எடுத்துக் காட்டுகிறது. எனவே, குற்றவாளி ஜெயாவின் படங்களை, அவரது சமாதியை, அவரது பெயரில் செயல்படுத்தப்படும் திட்டங்களை அகற்றவும், நீக்கவும் கோருவதோடு, கிரிமினல்களால் நடத்தப்படும் அ.தி.மு.க. அரசைப் புறக்கணிக்கும் மக்கள் திரள் போராட்டங்கள் மட்டும்தான் தமிழகத்தின் மீது திணிக்கப்பட்ட இழிவை, அவமானத்தைத் துடைத்தெறியும்.

● செல்வம்

# சொத்துக் குவிப்பு வழக்கு தீர்ப்பு:

# செத்த பாம்பை அடித்த வீரம்!

**ஜெயா, சொத்துக் குவிப்பு வழக்கை 21 ஆண்டு காலம் இழுத்தடிப்பதற்கு உடந்தையாகவும், அவர் கர்நாடகா உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்படுவதற்கு புரோக்கராகவும் செயல்பட்ட உச்சநீதி மன்றம், அவர் இறந்த பிறகும் குழப்பத்துக்கு இடமளிக்கும் தீர்ப்பையே அளித்திருக்கிறது.**

*“மை லார்ட்” என்று நீதிபதிகளைப் பார்த்துச் சொல்வதில் அர்த்த முள்ளது.*

*பொதுவாழ்வில் நேர்மையற்ற நடைமுறை மற்றும் இலஞ்ச ஊழலில் ஈடுபடுவோர் அனைவருக்கும் எச்சரிக்கையாக இத்தீர்ப்பு அமைந்துள்ளது.*

*அரசியல்வாதிகளாக இருக்கக்கூடியவர்கள் பொதுவாழ்வில் எப்படித் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டக்கூடியதாகவும், வரலாற்றுச் சிறப்புக்குரிய வகையிலும் இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கிறது.*

*ஊழல் அரசியல்வாதிகளுக்கும் ஆட்சியாளர்களைப் புற்றீசல் போலச் சூழ்ந்திருந்து அவர்களைச் சீரழிக்கும் நிழல் அதிகார மையங்களுக்கும் விடு விக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை என்றே இந்தத் தீர்ப்பைக் கருத வேண்டும்.*

- இவையெல்லாம் சொத்துக்குவிப்பு வழக்கில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ், அமிதவராய் அளித்த தீர்ப்பு குறித்து தமிழக ஊடகங்களும் தமிழக எதிர்க்கட்சி தலைவர்களும் சிலாகித் துச் சூட்டியிருக்கும் புகழாரங்கள். இந்தத் தீர்ப்பின் இணைப்பாக நீதி பதி அமிதவராய் ஊழல் குறித்தும் அதனை எதிர்க்க வேண்டிய அவ சியம் குறித்தும் கூறியிருக்கும் தத்துவ ஞானபோதனைகளை எடுத் துப் போட்டு, ஊழலுக்கு எதிராக உச்சநீதி மன்றம் வெட்டரிவாளைத் தூக்கிவிட்டதாகவும், அதனால் ஊழலில் ஈடுபடும் அரசியல்வாதி களும் அதிகாரவர்க்கமும் அஞ்சி நடுங்குவதாகவும் ஊடகங்கள் சித்த ரிக்கின்றன.

அந்நியன், இந்தியன் பட ரசிகர்கள் வேண்டுமானால் இத்தீர்ப்புக்கு மயங்கலாம். அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்துக்கு இந்த வழக்கில் நீதிமன்றங்கள் நடந்து கொண்ட விதம் வேறொரு நம்பிக்கையை அளித்திருக் கிறது. “ஊழல் வழக்கை எப்படியெல்லாம் இழுத்தடிக்க லாம், அதற்குச் சட்டத்தையும் நீதிமன்றத்தையும் நீதிபதி களையும் எப்படியெல்லாம் வளைத்துப் போட்டுக் கொள் ளலாம் என்பதை எடுத்துக்காட்டி, பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்க அஞ்சத் தேவையில்லை” என அவர் களுக்கு உணர்த்தியிருக்கிறது இந்த வழக்கு.

“புற்றுநோயைவிட மோசமானது ஊழல். இதை நீதி மன்றத்தின் தீர்ப்புகள் மூலம்தான் ஒழிக்கமுடியும்” எனத் தீர்ப்பில் அருள்வாக்கு சொல்லியிருக்கிறார், நீதிபதி அமிதவராய். இந்தியாவே கவனித்துவந்த இந்த புற்று நோய்க் கட்டியை ஒழிப்பதற்கே 21 ஆண்டுகள் ஆகியிருக் கிறது என்றால், சமூகம் முழுவதுமே வேர்விட்டிருக்கும் ஊழலை நீதிமன்றங்கள் மூலம் ஒழிப்ப தற்கு எத்தனை ஆண்டு காலம் ஆகும்? அதுவரை, “என்றாவது ஒருநாள் நீதி நிச் சயம் கிடைக்கும்” என்ற நம்பிக்கையில் மக்கள் அனைவரும் கையைக் கட்டிக் கொண்டு, நடப்பதை வேடிக்கை பார்க்க வேண்டும் போலும்!

“இந்தத் தீர்ப்பின் ஆவணங்கள் பரும னாக உள்ளன. இந்தப் பாரத்தை நாங்கள் எடுத்துக் கொண்டோம்” என்று இலக்கி யமாய் நெகிழ்ந்திருக்கிறார் நீதிபதி அமி தவராய். பாரம் பெருத்துப் போனதற்கு இந்த வழக்கு 21 ஆண்டுகள் இழுத்தடிக் கப்பட்டது முக்கிய காரணமில்லையா? அந்தப் பாவத்தில் நீதிமன்றங்களுக்குப் பங்கில்லையா? இந்தக் குற்றக்கும்பலின் பாரத்தைத் தமிழக மக்கள் இத்தனை ஆண்டுகள் சுமக்கக் காரணமே நீதித் துறைதான். இந்த 21 ஆண்டுகளில் உச்ச நீதி மன்றமே எத்தனை முறை ஜெயா வைக் கைதூக்கிவிட்டிருக்கிறது?

ஒரு கிரிமினல் வழக்கை எப்படி யெல்லாம் இழுத்தடிக்கலாம் என்பதற்கு ஜெயாவின் வழக்கைச் சட்ட மாணவர் களுக்குப் பாடமாகவே வைக்கலாம் என்று பலரும் எழுதியிருக்கிறார்கள். அது, ஜெயாவின் சாதனை மட்டுமே யல்ல.

விசாரணை நீதிமன்றங்கள் முதல் சென்னை, பெங்களூரு உயர் நீதி மன்றங் களும் உச்சநீதி மன்றமும் எப்படியாவது

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அளித்த தீர்ப்பை உறுதி செய்த உச்சநீதி மன்ற நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ் (இடது) மற்றும் அமிதவராய்.



ஜெயாவைக் காப்பாற்றுவதற்காக நடத்திய தகிடுதத்தங்களைப் பட்டியல் போட்டால், அது வழக்கறிஞர்களுக்கே பெரிய "பாரமாக" இருக்கும் என்பதால், உச்ச நீதி மன்றம் இவ்வழக்கில் ஆற்றிய பாத்திரத்தை நினைவூட்ட சிலவற்றை மட்டும் சுருக்கமாகத் தந்திருக்கிறோம்.

**வழக்கை இழுத்தடித்ததில் உச்சநீதி மன்றத்தின் பங்கு**

சொத்துக் குவிப்பு வழக்கை 2003-ஆம் ஆண்டின் இறுதியில் தமிழகத்திலிருந்து கர்நாடகாவிற்கு மாற்றிய உச்சநீதி மன்றம், இந்த வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என அந்தத் தீர்ப்பில் உத்தரவிட்டது. மேலும், எம்.எல்.ஏ., எம்.பி.க்களுக்கு எதிரான ஊழல் வழக்குகளை ஒரு வருடத்திற்குள் முடித்து விட வேண்டும் என்று பிறிதொரு வழக்கில் உச்சநீதி மன்றம் ஆணையிட்டிருக்கிறது. ஆனால், ஜெயாவிற்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் தனது ஆணைகளை உச்சநீதி மன்றமே காற்றில் பறக்கவிட்டது.

சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை முடக்க, இலண்டன் ஹோட்டல் வழக்கையும் இதனுடன் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்று மனுச் செய்து, சாதகமான தீர்ப்பை பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் பெற்றார் ஜெயா. இதனை எதிர்த்து தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். உச்சநீதி மன்றம் அது குறித்து விசாரித்து உடனே தீர்ப்பு வழங்காமல், சொத்துக்குவிப்பு வழக்கை விசாரிப்பதற்கே இடைக்காலத் தடை விதித்தது. இந்த இடைக்காலத் தடை காரணமாக நான்கு ஆண்டுகள் வழக்கு விசாரணை முற்றிலுமாக முடக்கப்பட்டதற்கு உச்ச நீதி மன்றமே பொறுப்பு. இது உச்ச நீதி மன்றம் ஜெயாவுக்குச் செய்த மிகப் பெரிய சேவை.



சொத்துக் குவிப்பு வழக்கு நீதிமன்றத் தாழ்வாரங்களிலேயே செத்துவிடாமல் காப்பாற்றிய தி.மு.க. பொதுச் செயலர் க.அன்பழகன்.



அசைக்கமுடியாத ஆதாரங்களோடு குற்றவியல் வழக்காகக் கட்டியமைத்த விசாரணை அதிகாரி நல்லம்மா நாயுடு (இடது); நேர்மையாக விசாரணையை நடத்திச்சென்ற அரசு வழக்குரைஞர் பி.வி.ஆச்சார்யா (நடுவில்); ஜெயாவின் அதிகார பலத்துக்குப் பணிந்துவிடாமல் இரும்புப் பின்னலாகத் தீர்ப்பை எழுதிய சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹா.

"பவானி சிங்தான் அரசு வழக்குரைஞராகத் தொடர வேண்டும், நீதிபதி பாலகிருஷ்ணாதான் வழக்கை விசாரிக்க வேண்டும்" என்று கோரி உச்சநீதி மன்றத்தில் வழக்கு போட்டார் ஜெயலலிதா. "இந்த ஏட்டய்யாவோடுதான் போவேன்" என்ற வடிவேலு காமெடியை விஞ்சிய கேலிக்கூத்து இது. ஆனாலும், உச்சநீதி மன்றம் ஜெயாவிற்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது.

தற்போதைய தீர்ப்பையே எடுத்துக் கொள்ளுங்கள். ஜெயலலிதாவை விடுவித்த குமாரசாமியின் தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கு விசாரணை உச்ச நீதி மன்றத்தில் ஜூன் 2016-இல் முடிந்து விட்டது. பிப், 2017 இல் ஜெயா இறந்த பிறகு, அரசு வழக்குரைஞர் துஷ்யந்த் தவே நினைவூட்டிய பிறகு, சசிகலா முதலமைச்சர் நாற்காலியில் உட்கார முயற்சி செய்துகொண்டிருந்த வேளையில்தான் தீர்ப்பை எழுதிக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள், நீதிபதிகள்.

குன்ஹாவின் தீர்ப்பை உறுதி செய்திருப்பதற்கு மேல் இவ்வழக்கில் புதிய வெளிச்சம் எதையும் இந்தத் தீர்ப்பு பாய்ச்சவில்லை. தண்டனையைக் கூட்டவில்லை. குமாரசாமியின் முறைகேடான தீர்ப்புக்குக் கடுமையான கண்டனங்களும் இல்லை. ஜெயா மரணமடைந்து விட்டதால், அவருக்கு எதிரான மேல்முறையீடு மட்டும் தணிக்கப்படுகிறது *(abated)* எனக் கூறுகிறது இத்தீர்ப்பு. தணிந்து விட்டது என்று கூறியிருப்பதனால் நூறு கோடி அபராதத்தைக் கட்டத் தேவையில்லை என்றும் ஒரு வாதம் கிளப்பப்படுகிறது. இதற்கு ஏன் இந்தத் தாமதம் என்று கேள்வி எழுப்பினாலே, கேட்பவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ஏவுவார்கள் நீதிபதிகள்.

**உச்சநீதி மன்றம் ஜெயாவிற்கு வழங்கிய சலுகைகள்**

2001-இல் இந்த வழக்கு சென்னையில் நடந்தபோது, சிறப்பு நீதிமன்றத்திற்கு வந்து கேள்விகளுக்குப் பதில் அளிக்குமாறு ஜெயாவிற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. "தனக்குத் தொண்டை கட்டியிருப்பதால் நீதிமன்றத்திற்கு வந்து பதில் அளிக்க முடியாது" என அலட்சியமாக மறுத்தார், ஜெயா. நீதிமன்ற பெஞ்ச் கிளார்க் கேள்விகளோடு போயசு தோட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இப்படிப்பட்ட சலுகையை ஜெயாவைத் தவிர, இந்தியாவில் வேறெந்த கிரிமின

லுக்கும் நீதிமன்றம் வழங்கியதாகத் தெரியவில்லை.

ஜெயாவின் திமிர் குன்ஹாவிடம் செல்லுபடியாகவில்லை. நேரில் ஆஜராகி கேள்விகளுக்குப் பதிலளிக்குமாறு அவர் ஆணையிட்டார். கோயில் கோயிலாகப் போவதற்கு நேரம் இருக்கிறது, நீதிமன்றத்துக்கு வர நேரமில்லையா என்று கேட்டார் அரசு வழக்கறிஞர் ஆச்சார்யா. உடனே உச்ச நீதிமன்றம் போனார் ஜெயா. ''உங்களுக்கு எந்த தேதி வசதிப்படுமோ, அந்தத் தேதியில் நீதிமன்றத்திற்குச் சென்று பதில் அளியுங்கள்'' என ஜெயாவிற்குச் சலுகை காட்டியது உச்சநீதி மன்றம்.



சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயா-சசி கும்பலுக்குப் பிணை வழங்க மறுத்த கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி சந்திரசேகரா.

**கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் குமாரசாமி நடத்திய முறைகேடான விசாரணையை ரத்து செய்ய மறுத்து, வழக்கு நீண்ட காலம் நிலுவையில் இருப்பதைக் காரணமாகக் கூறி, அதனை நியாயப்படுத்தியது, உச்சநீதி மன்றம். இந்த முறைகேட்டிற்குப் பின் வந்த முறைகேடுதான் நாலும் மூணும் எட்டு என்று கூறிய குமாரசாமியின் தீர்ப்பு.**

அரசு வழக்குரைஞர் பி.வி.ஆச்சார்யாவிற்கு நெருக்கடிக்கு மேல் நெருக்கடி கொடுத்து, அவரைப் பதவி விலக வைத்த ஜெயா-சசி கும்பல், கர்நாடக பா.ஜ.க. அரசைப் பயன்படுத்தி அவரது இடத்தில் பவானி சிங்கை நியமித்துக் கொண்டது. பவானி சிங்கும், அச்சமயத்தில் சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக இருந்த பாலகிருஷ்ணாவும் கூட்டுச் சேர்ந்து, ஜெயா-சசி கும்பலுக்குச் சாதகமாக வழக்கை நடத்திச் சென்றனர்.

பவானி சிங்கின் நியமனமே முறைகேடாகச் செய்யப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டிய தி.மு.க., அவருடைய நியமனத்தை ரத்து செய்ய வேண்டும் என கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தது. அவ்வுயர் நீதிமன்ற நீதிபதி வகேலா பவானி சிங் நியமனத்தை ரத்து செய்தார்.

''பவானி சிங்தான் அரசு வழக்குரைஞராகத் தொடர வேண்டும், நீதிபதி பாலகிருஷ்ணாதான் வழக்கை விசாரிக்க வேண்டும்'' என்று கோரி உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார் ஜெயலலிதா. ''இந்த ஏட்டய்யாவோடுதான் போவேன்'' என்ற வடிவேலு காமெடியை விஞ்சிய கேலிக்கூத்து இது. தனக்கு எதிராக இந்த அரசு வக்கீல்தான் வழக்கு நடத்த வேண்டும், இந்த நீதிபதிதான் விசாரிக்க வேண்டும் என்று ஒரு குற்றவாளி கோரிக்கை வைத்த முதல் வழக்கும் இந்தியாவிலேயே இதுவாகத்தான் இருக்கும்.

ஜெயாவின் கைக்கூலியாகச் செயல்பட்ட அரசு வழக்குரைஞர் பவானி சிங் (இடது); சிறப்பு நீதிமன்றத்திற்கு பவானி சிங் நியமிக்கப்பட்டது முறைகேடானது எனத் தீர்ப்பளித்த கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி வகேலா.



இவ்வழக்கை விசாரித்த செளஹான்-பாப்டே அமர்வு, குற்றவாளிகள் எதைக் கோரினார்களோ அதையே உத்தரவாகப் பிறப்பித்தார்கள். பவானி சிங் நியமனம் முறைகேடானது என்பது நிரூபணமான பிறகும், ''புதிய வழக்குரைஞரை நியமித்தால், வழக்கு விசாரணை தாமதப்படும்'' என்று கூறி பவானி சிங் தொடருவதற்கு அனுமதி அளித்ததுடன், நீதிபதி பாலகிருஷ்ணாவிற்கு, வழக்கு விசாரணை முடியும் வரை பதவி நீட்டிப்பு வழங்குமாறும் கர்நாடக அரசுக்கு சிபாரிசு செய்து, கூடுதலாகக் கூவினார்கள்.

### ஜெயாவின் தரகராக தலைமை நீதிபதி தத்து

நீதிபதி குன்ஹாவால் ஜெயா-சசி கும்பல் தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட மறுநிமிடமே, தீர்ப்பை நிறுத்தி வைத்து பிணை வழங்கக் கோரி, கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் முறையீடு செய்தனர். ''குற்றவாளிகளுக்கு தற்பொழுது பிணை அளிக்க வேண்டிய அவசியமில்லை'' என்பதைப் பல்வேறு சட்டங்கள், நீதிமன்றத் தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி மறுத்தார், கர்நாடகா உயர்நீதி மன்ற நீதிபதி சந்திரசேகரா.

இத்தீர்ப்பை எதிர்த்து ஜெயா-சசி கும்பல் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை, அப்பொழுது உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியாக இருந்த தத்து தலைமையிலான அமர்வு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. ஜெயாவுக்கு பிணை மறுத்த சந்திரசேகரா, ஊழல் குற்றவாளிகளுக்குப் பிணை வழங்குவது குறித்து உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே வழங்கியிருக்கும் வழிகாட்டுதல்களை விரிவாக எடுத்துக்காட்டியிருந்தார். ஆனால் தத்துவோ, அவை குறித்து எந்த விளக்கமும் அளிக்காமல், தடாலடியாக ஜெயா

வுக்குப் பிணை வழங்கினார்.

இந்த தீர்ப்பு ஒரு அப்பட்டமான முறைகேடு என்று எல்லோருக்கும் தெரிந்து விடும் என்பதால், அதை மறைக்கும் விதத்திலும், ஜெயலலிதாவுக்கு இன்னொரு சலுகை வழங்கும் விதத்திலும் கூடுதலாக ஒரு பித்தலாட்டமும் செய்தார் தத்து.



சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயாவின் தரகனாகச் செயல்பட்ட உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி தத்து (இடது); சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயாவைத் தப்புக் கணக்கின் மூலம் விடுதலை செய்த கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி குமாரசாமி.

தத்து பிணை வழங்கிவிட்ட போதிலும், உயர்நீதி மன்றம் நிரபராதி என்று தீர்ப்பளிக்காத வரை, ஜெயாவால் மீண்டும் முதல்வராக முடியாது என்ற நிலையே இருந்தது. ஜெயா மீண்டும் முதல்வர் நாற்காலியில் அமர்வதற்கு ஏற்பாடு செய்து தரும் விதத்தில், மேல்முறையீட்டின் விசாரணையை மூன்றே மாதங்களில் முடிக்க வேண்டுமென்றும், இழுத்தடிக்க அனுமதிக்க முடியாது என்றும், மூன்று மாதங்களுக்கு மேல் ஒரு நாள் கூடப் பிணையை நீட்டிக்க முடியாது என்றும் ரொம்பவும் கண்டிப்பான பேர்வழி போலத் தீர்ப்பில் குறிப்பிட்டார் தத்து. இதைவிடத் தரம் தாழ்ந்த ஒரு மோசடி நாடகத்தை உச்சநீதி மன்றம் கண்டிருக்காது என்றே சொல்ல வேண்டும்.

இந்தப் பிணை மனு விசாரிக்கப்படுவதற்கு முன்னரே, டிராபிக் ராமசாமி தத்துவிடம் ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் ஆயிரம் கோடி ரூபாய் உங்களுக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டிருப்பதாக ஒரு குற்றச்சாட்டு பரவலாக கூறப்படுகிறது என்று அதில் குறிப்பிட்டிருந்தார். இத்தகைய குற்றச்சாட்டுகள் வரும்போது, சம்மந்தப்பட்ட நீதிபதிகள் அந்த வழக்கு விசாரணையிலிருந்து விலகிக் கொள்வதுதான் பொதுவாக கடைப்பிடிக்கப்படும் மரபு. ஆனால் தத்துவோ, ‘‘அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்’’ என்று அந்தப் புகாரையே அலட்சியப்படுத்தினார்.

இந்தப் பிணை வழக்கில் ஜெயாவின் சார்பாக வழக்கறிஞர் பாலி நாரிமன் வாதாடினார். அவரது மகன் ரோஹிண்டன் நாரிமன் உச்சநீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றுவதால், பாலி நாரிமன் அவ்

**குன்ஹாவின் தீர்ப்பை உறுதி செய்திருப்பதற்கு மேல் இவ்வழக்கில் புதிய வெளிச்சம் எதையும் உச்சநீதி மன்றத் தீர்ப்பு பாய்ச்சவில்லை. தண்டனையைக் கூட்டவில்லை. குமாரசாமியின் முறைகேடான தீர்ப்புக்குக் கடுமையான கண்டனங்களும் இல்லை. இதற்கு ஏன் இந்தத் தாமதம் என்று கேள்வி எழுப்பினாலே, கேட்பவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ஏவுவார்கள் நீதிபதிகள்.**

வழக்கில் வாதாடுவது பார் கவுன்சில் வகுத்துள்ள நெறிகளுக்கு எதிரானது என்று டிராபிக் ராமசாமி புகார் செய்த போதிலும், அந்த முறைகேட்டையும் அனுமதித்தார் தத்து.

### குமாரசாமி மட்டுமா எட்டப்பன்?

ஜெயாவை விடுதலை செய்ய ‘‘நாலும் மூணும் எட்டு’’ என்று கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி குமாரசாமி அளித்த தீர்ப்பு, சிரிப்பாய் சிரித்த தீர்ப்பு என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், அந்த வழக்கை குமாரசாமியை வைத்து விசாரித்து, ஜெயாவுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டும் என்ற திட்டத்தோடு உச்சநீதி மன்றத்தின் துணையுடன், கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் அரங்கேறிய முறைகேடுகளை எல்லோரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

குன்ஹா தீர்ப்பு வழங்கியதோடு, பவானி சிங்கின் பணி முடிந்து விட்டதெனினும், ஜெயலலிதாவின் பிணை மனுவையும் மேல் முறையீட்டையும் எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வாதாடுவதற்கும் பவானி சிங்கையே நியமித்து உத்தரவு பிறப்பித்தது பன்னீரை பினாமி முதல்வராக கொண்ட ஜெயா அரசு. கர்நாடக அரசால் நடத்தப்பட்ட இந்த வழக்கில் அரசு வழக்கறிஞரை நியமிக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு கிடையாது என்ற போதிலும், வேண்டுமென்றே இந்த முறைகேட்டைச் செய்தது தமிழக அரசு.

பவானி சிங் நியமனத்தை ரத்து செய்யக் கோரி கர்நாடகா உயர் நீதி மன்றத்தில் ஐந்து முறை அடுத்தடுத்து வழக்குகளைத் தொடுத்தார், அன்பழகன். இவ்வழக்குகளை மாறி மாறி விசாரித்த கர்நாடகா உயர்நீதி மன்ற நீதிபதிகளுள் வகேலா என்பவரைத் தவிர, மற்ற நீதிபதிகள் பவானி சிங் நியமனத்தை ரத்து செய்ய மறுத்துவிட்டனர்.

நீதிபதி வகேலா பவானி சிங் நியமனத்தை ரத்து செய்துவிடுவார் என்ற நிலையில் ‘‘என்னுடைய நியமனத்துக்கு எதிராக நீங்கள் ஏற்கெனவே தீர்ப்பளித்தவர் என்பதால், உங்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை’’ என்று பவானி

சிங்கை வைத்து வாதாடியது ஜெயா கும்பல். வகேலா வழக்கை விசாரிப்பதிலிருந்து விலகிக்கொண்டார். மேல்முறையீட்டு வழக்கை மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்று தத்து போட்டிருக்கும் உத்தரவைக் காட்டி, பவானி சிங்கே அரசு வழக்கறிஞராகத் தொடருவதை அனுமதித்துத் தீர்ப்பளித்தது, கர்நாடகா உயர்நீதி மன்றம்.



சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையின்போது, ஜெயாவிற்குச் சாதகமான தீர்ப்புகளை வழங்கிய உச்சநீதி நீதிபதிகள் சௌஹான் (இடது) மற்றும் பானுமதி.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அன்பழகன் உச்சநீதி மன்றம் சென்றார். வழக்கை விசாரித்த இரண்டு நீதிபதிகளுள் ஒருவரான மதன் லோகூர், பவானி சிங்கின் முறைகேடான நியமனத்தை ரத்து செய்ததோடு, மேல் முறையீட்டு வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். மற்றொரு நீதிபதியான பானுமதி, ஜெயலலிதாவை அரசு விழா மேடையிலேயே புரட்சித்தலைவி என்று துதிபாடியவர். இவர் பவானி சிங்கின் நியமனத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார்.

இந்த முரண்பட்ட தீர்ப்பின் காரணமாக மூன்று நீதிபதிகள் அமர்வுக்கு சென்றது இவ்வழக்கு. ''பவானி சிங்கின் நியமனம் முறைகேடானது, மேல்முறையீட்டு வழக்கை கர்நாடகா உயர்நீதி மன்றம் சட்டத்திற்குப் புறம்பாக அவசர அவசரமாக நடத்தி வருகிறது'' என்பதை அந்த அமர்வு ஒப்புக்கொண்டாலும், வழக்கைத் தொடக்கத்திலிருந்து மீண்டும் விசாரிப்பதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது.

வழக்கு நீண்ட காலம் நிலுவையில் இருப்பதைக் காரணமாகக் கூறி, குமாரசாமி நடத்திய முறைகேடான விசாரணையை நியாயப்படுத்தியது. கர்நாடக அரசால் பவானி சிங்கிற்குப் பதிலாக அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்ட பி.வி. ஆச்சார்யாவும், அன்பழகனும் தமது எழுத்துப்பூர்வ வாதத்தை நீதிபதி குமாரசாமியிடம் தாக்கல் செய்யலாம் எனக் கூறி, தனது கட்டைப்பஞ்சாயத்து உத்தரவுக்கு சப்பை கட்டியது. உச்ச நீதிமன்றம் நிகழ்த்திய இத்தனை முறைகேடுகளுக்குப் பின் கடைசியாக வந்த முறைகேடுதான் நாலும் மூணும் எட்டு என்று கூறிய குமாரசாமியின் தீர்ப்பு.



## பஞ்சுமிட்டாய் நீதி

குற்றவாளிகளான ஜெயா உள்ளிட்ட நால்வரும், இந்த வழக்கை இழுத்தடிப்பதற்காக ஏறத்தாழ 300 மனுக்களை அடுத்தடுத்து, ஒருவர் மாற்றி ஒருவர் மாற்றி போட்டிருக்கின்றனர். இந்த அளவுக்கு நீதிமன்றத்தைக் கேலிப்பொருளாக்கியவர்கள் யாரும் இல்லை. ஆனால் நீதிமன்றங்களோ, கைப்புள்ளை கணக்காக அவற்றையெல்லாம் துடைத்துப்போட்டுவிட்டு, இக்கட்டான தருணம் ஒவ்வொன்றிலும் ஜெயாவைக் காப்பாற்றி விட்டன. கீழிருந்து மேல் வரை சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு நீதிமன்றங்கள் நடத்திய இந்த கள்ள ஆட்டத்தின் தீய விளைவுகளைத் தமிழக மக்கள் அனுபவிக்க நேர்ந்தது.

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த 21 ஆண்டுகளில், 2001, 2011, 2016 என மூன்று முறை குற்றவாளி ஜெயலலிதா முதலமைச்சர் ஆக முடிந்தது. சசிகலாவும், இளவரசியும் துரைசாணிகளைப் போல, அதிகாரம் செலுத்த முடிந்தது. சிறை வாசமும், கொலை வழக்குகளும் தொழில்முறை கிரிமினல்களின் ''அந்தஸ்தை'' உயர்த்துவதைப் போல, இந்த ஊழல் வழக்கு ஜெயாவை, ஓட்டுப்பொறுக்கி கிரிமினல்கள் அனைவரும் கண்டு வியக்கும் ''சொர்ணாக்கா'' ஆக்கியது.

வழக்கிற்கு முன்னால் ஜெயா-சசி கும்பல் அடித்த கொள்ளையைக் காட்டிலும் அதற்குப் பின்னர் அடித்த கொள்ளை பன்மடங்காகப் பெருகியது. தானே நேரடியாகக் கொள்ளையடித்தது மட்டுமின்றி, மொத்த அ.தி.மு.க. கட்சியையும் அரசு எந்திரத்தையுமே ஒரு கொள்ளைக்கூட்டமாக ஒழுங்கமைத்து வெளிப்படையாகவே திருடியதும் இந்த இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சிதான். மொத்தத்தில் ஊழலுக்கு எதிராக நீதிமன்றம் செல்ல நினைப்பதே முட்டாள்தனம் என்ற அனுபவத்தைத்தான் இந்த வழக்கு சமூகத்துக்கு வழங்கியிருக்கிறது.

இந்த வழக்கின் முதல் குற்றவாளியான ஜெயா, குன்ஹா தீர்ப்புக்குப்பின் வெறும் 21 நாட்கள்தான் சிறைவாசத்தை அனுபவித்

தார். தற்பொழுது பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சசிகலாவோ, சிறையிலிருந்தபடியே தனது கூட்டத்தை இயக்கும் மாஃபியாத் தலைவனைப் போலத் தமிழக அரசை இயக்குகிறார். இவையனைத்தும் இந்த வழக்கில் நீதி வென்றிருப்பதையா காட்டுகின்றன?

சொத்துக் குவிப்பு வழக்கில் கண்ணுக்குத் தெரிவது நான்கு குற்றவாளிகள்தான். இவர்கள் தவிர, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், பத்திரப் பதிவு அதிகாரிகள், பொதுத்துறை வங்கி அதிகாரிகள் என ஒரு பெரும் அதிகார வர்க்கமே இந்தக் குற்றத்தின் பங்குதாரர்களாக இருந்துள்ளனர். மேலும், தத்து, சௌஹான், பாப்டே, செல்லமேஸ்வர், குமாரசாமி, அருணா ஜெகதீசன், பானுமதி என்றொரு நீதிபதிகளின் கூட்டமே, ஜெயாவிற்கு விசுவாசமாக நடந்து கொண்டிருப்பதை இவ்வழக்கு நெடுகிலும் காண முடியும். குற்றத்தின் பங்குதாரர்களாக இருந்த இவர்கள் அனைவருமே, இப்பொழுதும் நம்மைச் சுற்றி யோக்கியவான்களைப் போல நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

**குற்றவாளிகளான ஜெயா உள்ளிட்ட நால்வரும், இந்த வழக்கை இழுத்தடிப்பதற்காக ஏறத்தாழ 300 மனுக்களை அடுத்தடுத்து, ஒருவர் மாற்றி ஒருவர் மாற்றி போட்டிருக்கின்றனர். இந்த அளவுக்கு நீதிமன்றத்தைக் கேலிப்பொருளாக்கியவர்கள் யாரும் இல்லை. ஆனால் நீதிமன்றங்களோ, கைப்புள்ளை கணக்காக அவற்றையெல்லாம் துடைத்துப்போட்டுவிட்டு, இக்கட்டான தருணம் ஒவ்வொன்றிலும் ஜெயாவைக் காப்பாற்றி விட்டன.**



இன்று சசிகலா கும்பல் சிறையில் இருக்கிறது என்றால், நிச்சயமாக அதற்கு உச்ச நீதிமன்றம் காரணமல்ல. கீழிருந்து மேல்வரை நீதித்துறையிலும், காங்கிரசு- பா.ஜ.க. கட்சிகளிலும், அதிகார வர்க்கத்திலும் நிறைந்திருந்த ஜெயலலிதாவின் ஆட்கள் இந்த வழக்கை ஒவ்வொரு படியிலும் முடக்கினார்கள். அதையெல்லாம் மீறி ஓட்டைகள் நிறைந்த இந்த சட்டத்தின் வழியாகவும் இப்படி ஒரு தீர்ப்பை வரவழைக்க முடிந்ததற்கு நான்கு பேரைக் காரணமாகச் சொல்லலாம்.

ஜெயா-சசி கும்பல் அடித்த கொள்ளையில் 66 கோடி என்பது ஒரு சிறு துளிதான். எனினும், தப்பிக்க முடியாத, ஓட்டைகள் இல்லாத, அசைக்க முடியாத சாட்சியங்களின் அடிப்படையிலான குற்றவியல் வழக்காக இதனைக் கட்டியமைத்த விசாரணை அதிகாரி நல்லம்ம நாயுடு,

ஜெயா-சசி கும்பல் மற்றும் கர்நாடக பா.ஜ.க. அரசின் மிரட்டல்களுக்கும் அவதூறுகளுக்கும் பணிந்து போகாமல் நேர்மையாகவும் ஈடுபாட்டுடனும் விசாரணையை நடத்திச் சென்ற அரசு வழக்குரைஞர் பி.வி. ஆச்சார்யா,

இந்த வழக்கில் ஒரு தரப்பாக இணைந்து கொண்டு, ஜெயாவைக் காப்பாற்ற முனைந்த நீதித்துறையின் கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கி, ஒவ்வொரு கட்டத்திலும் இந்த வழக்கு செத்து விடாமல் காப்பாற்றி, குன்ஹாவிடம் கொண்டு சேர்த்த பேராசிரியர் அன்பழகன் மற்றும் தி.மு.க.வின் வழக்கறிஞர்கள்,

ஜெயாவின் அதிகார பலத்தையும் ஆணவத்தையும் பார்ப்பனத் திமிரையும் எள்ளளவும் சட்டை செய்யாத, நீதிமன்ற அறைக்குள் மற்ற குற்றவாளிகள் எப்படி நடத்தப்படுவார்களோ அதே போன்று ஜெயலலிதாவையும் நடத்தும் துணிவினை இயல்பாகக் கொண்டிருந்த, உச்சநீதிமன்றத்தின் அறிவார்ந்த நீதிபதிகள் எத்தனை முயன்றாலும் அறுக்கவியலாத இரும்புப் பின்னலாகத் தீர்ப்பை எழுதும் திறமையும் கொண்டிருந்த நீதிபதி குன்ஹா.

இந்த நான்கு பேரைத் தவிர ஜெயாவின் தண்டனைக்கு காரணமான ஐந்தாவது நபரும் உண்டு. அது ஜெயா-சசி கும்பலேதான். அறிவும் சுயமரியாதையும் உள்ளவர்கள் அண்டத்தயங்கும் ஜெயாவின் அரசவை, அதில் நிறைந்திருந்த துதிபாடிகள், பாசிசக் கும்பலுக்கே உரிய திமிர், குறுக்குப் புத்தி ஆகியவை காரணமாக வழக்கினை முடிவே இல்லாமல் இழுத்து விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு, ஆச்சார்யாவிடமும், குன்ஹாவிடமும் வந்து சிக்கிக் கொண்டார்கள்.

இந்த தீர்ப்பு ஜெயா உயிருடன் இருந்திருந்தால் வந்திருக்குமா? 21 ஆண்டு வரலாறு ஐயத்தையே தருகிறது. ஜெயாவுக்கு 100 கோடி அபராதம் என்று கூறிவிட்டு, மரணத்தின் காரணமாக அவருடைய மேல்முறையீடு தணிந்திருப்பதாகவும் இத்தீரப்பு குறிப்பிட்டிருப்பது குழப்பத்தையே விதைத்திருக்கிறது. டான்சி வழக்கில் ஜெயாவின் மனசாட்சிக்கு வேண்டுகோள் விடுத்து தீர்ப்பெழுதிய பெருமை கொண்டது உச்ச நீதிமன்றம். வேண்டுகோள் விடுவதற்குத் தகுதியான மனச்சாட்சி இல்லாமலிருப்பதும், நீதி கிடைப்பதற்கான ஒரு நிபந்தனை போலும்!

● குப்பன்

# பிர்லா-சஹாரா ஆவணங்கள்: மோடியின் உத்தமர் வேடம் கலைந்தது!

**இலஞ்சம் வாங்கியிருப்பவர், மோடி; அதை மூடி மறைத்தவர், இலஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் தலைவர்; அதை விசாரிக்க மறுப்பவர்கள், உச்சநீதி மன்ற நீதிபதிகள்; மொத்த விவகாரத்தையும் இருட்டடிப்பு செய்தவை ஊடகங்கள்.**

2013-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அப்போதைய காங்கிரஸ் ஆட்சியில் நடந்த லஞ்ச லாவண்யங்களில் முக்கியமான நிலக்கரி ஒதுக்கீட்டு ஊழலில் குற்றம் சாட்டப்பட்டிருந்த பிர்லா என்ற தரகு முதலாளியின் அலுவலகங்களில் ஒரு தேடுதல் வேட்டையை நடத்தியது, மத்திய புலனாய்வு துறை (சி.பி.ஐ). அந்தத் தேடுதலில் 25 கோடி ரூபாய் ரொக்கமாக கைப்பற்றப்பட்டதோடு, பிர்லா குழுமத்தின் தலைவர் (CEO) சுபேந்து அமிதாப்பின் கணினியில் இருந்து பல கோப்புகள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது தொடர்பாக குறிப்புகள் இருந்தன.

சுபேந்து அமிதாபின் கணினியில் கிடைத்த ஆவணங்கள் ஒன்றில் - "Gujarat CM Rs 25 crores. 12 paid. 13?" (குஜராத் சி.எம்.- ரூ 25 கோடி.12 கொடுத்தாச்சு. 13?) என்ற குறிப்பு காணப்பட்டது.

அதாவது மன்மோகன் ஆட்சியின் நிலக்கரி ஊழல் பற்றி புலனாய்வு செய்யப்போன இடத்தில், வேறொரு ஊழலுக்கான ஆதாரம் சி.பி.ஐ. வசம் சிக்கியிருக்கிறது. குஜராத் முதல்வருக்கு பிர்லா நிறுவனம் எதற்காகப் பணம் கொடுத்தது என்ற கோணத்தில் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் இன்னொரு விசாரணையை சி.பி.ஐ. தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் இந்த ஆவணங்களை வருமானவரித் துறையிடம் ஒப்படைத்த சி.பி.ஐ, மேற்படி 12 கோடி ரூபாய்க்கு பிர்லா வருமான வரி கட்டியிருக்கிறாரா என்று மட்டும் விசாரிக்கும்படி கோரியது.

அதன்படி வருமான வரித்துறை அமிதாபை பல முறை விசாரித்ததில் "Gujarat CM Rs 25 crores. 12 paid. 13?" என்று எழுதியது தான் தான் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், அது "Gujarat Alkalis and Chemicals" என்பதை (ஒரு இரசாயன நிறுவனம்) குறிப்பதாக விளக்கம் சொல்லியிருக்கிறார். அவர் பொய் சொல்கிறார் என்று வருமான வரித்துறை தனது 1287 பக்க விசாரணை அறிக்கையில் முடிவு செய்தது. (http://indianexpress.com/article/india/india-others/regularly-routed-cash-through-hawala-top-birla-executive-tells-income-tax/)

மோடிதான் அந்த அந்த காலகட்டத்தில் குஜராத் முதல்வராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆவணங்கள் பற்றிய வருமான வரித்துறையின் விரிவான விசாரணையிலிருந்து தெரிய வந்த இரண்டு முக்கிய விஷயங்கள் - ஒன்று, பிர்லா குழுமம் ஹவாலா மூலமாக பெருமளவு ரொக்கப் பணம் பெற்று வந்தது; இரண்டு, அவ்வாறு பெறப்பட்ட பணம் உயர் பதவிகளில் இருந்த பல்வேறு நபர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. கிடைத்த ஆவணங்கள் பற்றி வருமான வரித்துறை முறையான ஆய்வு நடத்தி இந்தத் தகவல்களை உறுதி செய்திருக்கிறது.

இரண்டாவது வழக்கு சகாரா குழுமம் தொடர்பிலானது. அந்தக் குழுமத்தின் தலைவர் சுப்ரதா ராய் நிதி நிறுவனங்கள், ரியல் எஸ்டேட் திட்டங்கள் மூலமாக கருப்புப் பணத்தை புழங்கவிட்டதாக உச்சநீதி மன்றத்தால் மார்ச் 2014-இல் திகார் சிறையில் வைக்கப்பட்டவர்.

சஹாரா குழுமத் தலைவர் சுப்ரதா ராய் (இடது) மற்றும் ஆதித்யா பிர்லா குழுமத் தலைவர் குமாரமங்கலம் பிர்லா.



2014 நவம்பர் 22-ஆம் தேதி டெல்லி நொய்டாவில் உள்ள சகாரா குழுமத்தின் அலுவலகங்களில் தேடுதல் நடைபெற்றது. ரூ.137 கோடி ரொக்கப் பணமும், பெரும் எண்ணிக்கையிலான ஆவணங்களும், சுப்ரதா ராயின் தனிப்பட்ட ஊழியர்களின் கணினிகளில் இருந்து பல கோப்புகளும் கைப்பற்றப்பட்டன. பல மூத்த அரசியல் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட ரொக்கப் பணம் பற்றிய விபரங்கள் அவற்றில் இருந்தன.

ஒரு கணினி கோப்பின் அச்சுப் பிரதியில் 'இன்னின்ன தேதியில் இன்னின்ன நபரிடம் இருந்து இவ்வளவு தொகை பெறப்பட்டது' என்று பணம் வரத்து பட்டியல் ஒன்று இருந்தது. தொகைகளின் கூட்டல் ரூ.115 கோடி. அதன் பிறகு பல்வேறு நபர்களுக்கு, பல்வேறு தேதிகளில் ரொக்கம் பட்டுவாடா செய்யப்பட்ட விபரங்களும், பணம் கொண்டு கொடுக்கப்பட்ட இடமும், கொண்டு போனவர் பெயரும் இருந்தன.

தேடுதலின் போது கைப்பற்றப்பட்ட அந்த அச்சுப் பிரதியில் ஒரு வருமான வரித்துறை அதிகாரி, இரண்டு சாட்சியங்கள் மற்றும் ஒரு சகாரா அலுவலர் ஆகியோர் கையொப்பமிட்டு உறுதி செய்திருந்தனர்.

இதே ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சிறு சிறு மாற்றங்களோடு இன்னொரு கோப்பிலும் இருந்தன. முதல் ஆவணத்தில் *"cash given at Ahmedabad, Modiji"* (அகமதாபாதில் கொடுக்கப்பட்ட ரொக்கப் பணம், மோடிஜி) என்று குறிப்பிடப்பட்டிருந்தது, பிற ஆவணங்களில் *"cash given to CM Gujarat"* (குஜராத் சி.எம்-க்கு கொடுக்கப்பட்ட ரொக்கப்பணம்) என்று எழுதப்பட்டிருந்தது.

"அகமதாபாதில் மோடிஜி"க்கு கொடுத்ததாக ரூ.40 கோடி, "மத்திய பிரதேச சி.எம்"-க்கு கொடுத்ததாக ரூ.10 கோடி, "சத்தீஸ்கர் சி.எம்."-க்கு கொடுத்ததாக ரூ.4 கோடி, "டெல்லி சி.எம்"-க்கு கொடுத்ததாக ரூ.1 கோடி என்று குறிப்பிடப்பட்டிருந்தன. இந்தப் பணப் பட்டுவாடாக்கள் 2013-க்கும் 2014 மார்ச்சுக்கும் இடையில் நிகழ்ந்திருக்கின்றன. அப்போது குஜராத் முதலமைச்சர் பா.ஜ.க.வின் நரேந்திர மோடி, மத்திய பிரதேச முதல்வராக இருந்தவர் பா.ஜ.க.-வின் சிவ்ராஜ் சிங் சவுகான், சத்தீஸ்கர் முதலமைச்சர் பா.ஜ.க.-வின் ராமன் சிங், டெல்லி முதல்வராக இருந்தவர் காங்கிரசின் ஷீலா தீட்சித்.



பிர்லா குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுபேந்து அமிதாப்.

பிர்லா ஆவணங்கள் பற்றிய வருமான வரித்துறையின் விரிவான விசாரணையிலிருந்து, பிர்லா குழுமம் ஹவாலா மூலமாக பெருமளவு ரொக்கப் பணம் பெற்று வந்ததும், அவ்வாறு பெறப்பட்ட பணம் உயர் பதவிகளில் இருந்த பல்வேறு நபர்களுக்கு வினியோகிக்கப்பட்டதும் தெரியவந்திருக்கிறது.

சகாரா நிறுவனத்தில் நடைபெற்ற வருமான வரித்துறை சோதனை, பிரதமர் மோடியின் ஆட்சியில்தான் நடந்திருக்கிறது. ஆனால், சகாரா ஆவணங்கள் மட்டுமின்றி முன்னர் குறிப்பிட்ட பிர்லா ஆவணங்களும் இருட்டடிப்பு செய்யப்பட்டன. பிர்லா ஆவணங்கள் மீது நடத்திய விசாரணை முடிவுகளின் அடிப்படையிலும் சகாராவில் கிடைத்த ஆவணங்களின் அடிப்படையிலும் லஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யும்படி வருமான வரித்துறை சி.பி.ஐ.-க்கு பரிந்துரைத்திருக்க வேண்டும். ஆனால் விஷயம் அப்படியே இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது. இப்படிஊழலை இருட்டடிப்பு செய்த வருமான வரித்துறை அதிகாரி கே.வி.சவுத்ரிக்கு கிடைத்த தண்டனை என்ன தெரியுமா?

வருமான வரித் துறை புலனாய்வு பிரிவின் தலைவராக இருந்த கே.வி சவுத்ரி, 2015-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் (CVC) தலைமை கண்காணிப்பு ஆணையராக மோடியால் நியமிக்கப்பட்டார். ராம மோகனராவை ஊழல் கண்காணிப்பு ஆணையராக ஜெயலலிதா நியமித்தாரே அதுபோலத்தான்.

ஊழல் கண்காணிப்பு ஆணையர் நியமனத்தில் முறைகேடுகள் நடந்திருப்பதாக குற்றம் சாட்டினார் பிரபல வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண்.

முதலாவதாக, வருவாய்த் துறை அதிகாரி (ஆட்சிப் பணி அந்தஸ்து - I.R.S.) இல்லாத ஒருவர் கண்காணிப்பு ஆணையராக இதுவரை நியமிக்கப்பட்டதில்லை என்ற முறைகேட்டை சுட்டிக் காட்டினார் பூஷண்.

இரண்டாவதாக, 2-ஜி ஊழல் வழக்கை சி.பி.ஐ. விசாரித்துக் கொண்டிருந்தபோது, அதோடு தொடர்புடைய பலருடன் பேரம் பேசியதாக உச்சநீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்ட முன்னாள் சி.பி.ஐ. இயக்குனர் சின்ஹா-வின் வீட்டின் வருகைப் பதிவேட்டில், அப்போது வருமான வரித்துறையின் புலன் விசாரணை பிரிவின் தலைமைப் பொறுப்பில் இருந்த சவுத்ரியின்

பெயர் 4 முறை இடம் பெற்றிருந்தது.

அந்தக் காலகட்டத்தில்தான் ஸ்டாக் குரு ஊழலில் (ஸ்டாக் குரு என்ற மோசடி நிறுவனத்தை ஆரம்பித்து 6 மாதத்தில் பணத்தை இரட்டிப்பாக்கி தருவதாக நடந்த மோசடி) சவுத்ரியின் பங்கு பற்றி சி.பி.ஐ. விசாரணை நடத்திக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கம், சவுத்ரியால் விசாரிக்கப்பட்டு வந்த ஹவாலா டீலர் மொயின் குரேஷியும் அதே கால கட்டத்தில் ரஞ்சித் சின்ஹாவின் வீட்டுக்கு வந்து போயிருக்கிறார்.அதாவது, ஸ்டாக் குரு ஊழலுக்காக சவுத்ரியை விசாரிக்கும் சி.பி.ஐ. அதிகாரி சின்ஹாவும், ஹவாலா வழக்கில் சவுத்ரியால் விசாரிக்கப்படும் மொயின் குரேஷியும் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கின்றனர். இதுதான் ஊழலை ஒழிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் மத்திய புலனாய்வுத் துறை மற்றும் கருப்புப் பணத்தை ஒழிக்கும் வருமான வரித்துறை ஆகியவற்றின் லட்சணம்.

மூன்றாவதாக, எச்.எஸ்.பி.சி. என்ற பன்னாட்டு வங்கிக் கணக்குகளில் கருப்புப் பணத்தை பதுக்கி, சுமார் 4500 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்தவர்கள் மீதான வருமான வரித்துறை விசாரணையை 3 ஆண்டுகளாக இழுத்தடித்து வருவதும் திருவாளர் சவுத்ரிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய 'தூய்மை'யான பின்னணி கொண்ட சவுத்ரி, 'தூய்மை'யான பிரதமரால் ஊழல் ஒழிப்பு ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து, பிரசாந்த் பூஷண் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்.



மோடி அரசால், முறைகேடான வழியில் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள கே.வி.சௌத்ரி.

**சஹாரா குழும ஆவணங்களில், ''அகமதாபாதில் மோடிஜி''க்குக் கொடுத்ததாக ரூ 40 கோடி, ''மத்திய பிரதேச சி.எம்''-க்குக் கொடுத்ததாக ரூ 10 கோடி, ''சத்தீஸ்கர் சி.எம்.''-க்குக் கொடுத்ததாக ரூ 4 கோடி, ''டெல்லி சி.எம்''-க்குக் கொடுத்ததாக ரூ 1 கோடி எனக் குறிப்புகள் இருந்தன.**

பின்னர், 2016 நவம்பர் மாதம் சகாரா - பிர்லா ஆவணங்கள் பற்றிய தகவல் கிடைத்ததை ஒட்டி, அவற்றின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று அதே வழக்கில் ஒரு மனு தாக்கல் செய்தார் பிரசாந்த் பூஷண்.

உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் எந்த அவசரத்தையும் காட்டவில்லை. இந்த வழக்கில் ஆஜரான மோடி அரசின் தலைமை வழக்கறிஞர் முகுல் ரோத்கி, ''இத்தகைய ஆவணங்களையெல்லாம் ஆதாரங்களாக ஏற்றுக் கொண்டால், நாட்டில் யாருமே பாதுகாப்பாக இருக்க முடியாது'' என்று வாதிட்டிருக்கிறார். உச்சநீதிமன்றமோ, ''இந்த ஆவணங்கள் சில உதிரித் தாள்கள் மட்டுமே. அவற்றின் அடிப்படையில் உயர் பதவியில் இருக்கும் முக்கியமான தலைவர்களை விசாரணைக்கு உட்படுத்த முடியாது. இதை எல்லாம் வைத்துக் கொண்டு உயர் பதவியில் இருப்பவர்கள் மீது விசாரணைக்கு உத்தரவிட்டால் அவர்கள் எப்படி ஆட்சி புரிய முடியும். இன்னும் வலுவான ஆதாரங்கள் இருந்தால் பேசுங்கள் என்று கூறி பல முறை இழுத்தடித்து கடைசியில் வழக்கை தள்ளுபடியே செய்துவிட்டது.

முறைகேடும் ஊழலும் நடந்திருக்கிறது என்பதற்கு இதை விட வேறு என்ன வலுவான ஆதாரத்தை தர முடியும்? மோடி - 25 கோடி ரூபாய் என்று ஒரு துண்டு சீட்டில் யாராவது எழுதிக் கொண்டு வந்து காண்பித்தால், உடனே ஊழல் வழக்கு போட முடியுமா என்பதுதான் உச்ச நீதி மன்றம் எழுப்பும் கேள்வி. இந்த ஆவணங்கள் பிரசாந்த் பூஷண் கொண்டு வந்து காட்டிய உதிரிக் காகிதங்கள் அல்ல. பிர்லா மற்றும் சகாரா அலுவலகங்களில் சி.பி.ஐ.யும் வருமான வரித்துறையும் கைப்பற்றியிருக்கும் ஆவணங்கள். இதற்கு மேல் வலுவான ஆதாரம் காட்ட வேண்டுமென்றால், அது லஞ்சப் பணத்துக்கு பெற்றுக்கொண்டவர் வழங்கும் ரசீதாகத்தான் இருக்க முடியும். தற்போது உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு, ஊழல் வழக்குகள் பதிவு செய்வது தொடர்பாக ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புகளுக்கு எதிராக உள்ளது.

1990-களில் பா.ஜ.க தலைவர் அத்வானி முதற்கொண்டு பல்வேறு கட்சிகளின் முக்கியமான தலைவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டது தொடர்பான ஜெயின் ஹவாலா டயரி வழக்கில் உச்சநீதி மன்றம் கொடுத்த வழிகாட்டலின்படி, 'ஆதாரங்கள் எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் உயர்பதவியில் இருப்பவர்கள் தொடர்பாக ஊழல் குற்றச்சாட்டுகள் தவறாமல் விசாரிக்கப்பட வேண்டும்'. 2013-இல் லலிதா குமாரி வழக்கில், ''எந்த ஒரு ஆதாரம் கிடைத்தாலும், அந்த ஆதாரம் உண்மையானதா, போலியானதா என்று கவலைப்படாமல், அது உண்மையானது என்ற ஊகத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும்'' என்று உச்சநீதிமன்றத்தின்

அரசியல் சட்ட அமர்வு ஒன்று தீர்ப்பளித்திருந்தது.

இந்த உச்சநீதிமன்ற வழிகாட்டல்களின்படி சகாரா- பிர்லா ஆவணங்கள் மீது விசாரணை நடத்தும்படி பிரசாந்த் பூஷண் தலைமை கண்காணிப்பு ஆணையம், நேரடி வரிகளுக்கான வாரியம், அமலாக்கத் துறை, மத்திய புலனாய்வு அலுவகம், உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கருப்புப் பணத்துக்கான சிறப்பு விசாரணைக் குழு ஆகியோருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

வருமான வரி சட்டத்தின் 132(4A) பிரிவின் கீழ் கைப்பற்றப்பட்ட கோப்புகளில் உள்ள விபரங்கள், மேற்படி விசாரிக்கப்படுவது வரை உண்மை என்றே கருதப்பட வேண்டும். மேலும், ஐ.டி. துறையின் மதிப்பீட்டு அறிக்கையில் சகாரா தானாகவே முன்வந்து ரூ.1,217 கோடி பணத்தை ஒப்படைத்ததாக பதிவாகியிருக்கிறது.

ஜெயின் ஹவாலா டயரிகளில் இருந்ததைவிட வலுவான ஆதாரங்கள் சகாரா மற்றும் பிர்லா ஆவணங்களில் இருந்தன. ஜெயின் குறிப்புகளில் "LKA", "HN", "AB" என்று சில முதலெழுத்துகள் குறிப்பிடப்பட்டு பல லட்சம் கொடுக்கப்பட்டதாக பதிவாகியிருந்தது.அதன் அடிப்படையிலேயே அத்வானி உள்ளிட்ட பல கட்சித் தலைவர்கள் மீது ஊழல் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட்டிருந்தது, உச்சநீதிமன்றம்.

பிர்லா ஆவணங்களிலோ, இன்னும் தெளிவாக, விபரமாக குறிப்பிட்ட திட்டங்களுக்கு இன்ன அமைச்சகத்துக்கு, இன்ன அதிகாரிக்கு கொடுக்கப்பட்ட லஞ்சத் தொகைகள் பற்றிய குறிப்பான விபரங்கள் காணப்படுகின்றன.இவை தொடர்பான மின்னஞ்சல் பரிவர்த்தனை விவரங்களும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் உள்ளன. அந்த மின்னஞ்சல் எழுதப்பட்ட காலத்தில் ஆதித்ய பிர்லா குழுமத்தின் ஹிண்டால்கோ நிறுவனம் தனது அலுமினியம் ஆலைக்காக மத்திய பிரதேசத்தின் சிங்கரவுலி நிலக்கரி வயல்களின் மகான் பிளாக்கிலிருந்து நிலக்கரி பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தது. இந்த விபரங்கள் காட்டுவது என்னவென்றால், நவம்பர் 16, 2012 தேதியிட்ட "GC October/ November" என்ற ஆவணத்தில் "Gujarat CM"-க்கு பணம் கொடுக்கப்பட்டது தொடர்பான குறிப்பை ஏதோ கிறுக்கல் என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது என்பதைத்தான்.



மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் நியமனத்தில் நடந்த முறைகேட்டை அம்பலப்படுத்திய உச்சநீதி மன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண்.

**பிர்லா மற்றும் சகாரா குழுமங்களில் கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில், இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யும்படி சி.பி.ஐ-க்கு வருமான வரித்துறை பரிந்துரைத்திருக்க வேண்டும். ஆனால், விஷயம் அப்படியே இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது. இந்த ஊழலை இருட்டடிப்பு செய்த வருமான வரித்துறை அதிகாரி கே.வி சவுத்ரி மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக, யோக்கியர் மோடியால் நியமிக்கப்பட்டார்.**

சஹாரா-பிர்லா ஆவணங்கள் குறித்த வழக்கைப் புலன் விசாரணை செய்யவும் மறுத்து, அதனைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்ட உச்சநீதி மன்ற நீதிபதிகள் அமிதவராய் (இடது) மற்றும் அருண் மிஸ்ரா.



"இது துரதிர்ஷ்டவசமானது. ஊழலுக்கு எதிராகவும், பொது வாழ்க்கையில் நேர்மைக்காகவும் நடத்தப்படும் இயக்கத்துக்கு மிகப்பெரிய பின்னடைவு. நிலக்கரி ஊழலிலும், 2ஜி ஊழலிலும் சுயேச்சையான விசாரணைக்கு உத்தரவிட்டு தன்னை சிறப்பித்துக் கொண்ட உச்சநீதி மன்றத்தின் பிம்பத்தின் மீதும் இது ஒரு கறுப்புப் புள்ளி. அதிகாரத்தில் இருக்கும் பலம் பொருந்தியவர்கள் சிறை செல்ல நேரிடும் என்றால், தீர்ப்பெழுதும் உச்சநீதி மன்றத்தின் கைகள் நடுங்குகின்றன" என்று கூறியிருக்கிறார் பிரசாந்த் பூஷண்.

ஆ.ராசாவையோ, கனிமொழியையோ, சாகித் பல்வாவையோ, அம்பானியின் ஊழியர்களையோ சிறைக்கு அனுப்புவதற்கு உச்ச நீதி மன்றத்தின் கைகள் நடுங்கவில்லை. ஆனால் அதே வழக்கில் அம்பானியையும் டாடாவையும் நீரா ராடியாவையும் சிறைக்கு அனுப்ப உச்ச நீதிமன்றத்துக்கு துணிவில்லை. இது நேரடி சாட்சியமே இல்லாமல் அப்சல் குருவுக்கு தூக்குதண்டனை விதித்த உச்ச நீதிமன்றம். பொய் சாட்சி என்று தெரிந்த பின்னரும் பேரறிவாளனை விடுவிக்க மறுக்கும் நீதிமன்றம்; நாலும் மூணும் எட்டு என்ற குமாரசாமியின் தீர்ப்பு சரியா தவறா என்று மாதக் கணக்கில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் உச்ச நீதிமன்றம்; உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மீதான ஊழல் வழக்குகளை கிடப்பில் போட்டு வைத்திருக்கும் நீதிமன்றம்.





சஹாரா குழுமத்திடமிருந்து முறைகேடாகப் பணம் பெற்றுள்ள சத்தீஸ்கர் மாநில பா.ஜ.க. முதல்வர் ராமன் சிங் (இடது), ம.பி. மாநில பா.ஜ.க. முதல்வர் ''வியாபம் ஊழல் புகழ்'' சிவராஜ் சிங் சௌஹான் (நடுவில்) மற்றும் முன்னாள் டெல்லி முதல்வர் ஷீலா தீட்சித்.

உச்சநீதி மன்றத்தின் கைகள் நடுங்குவது அதிகாரத்தில் இருக்கும் மோடி பற்றிய பயத்தால் மட்டுமில்லை, இந்த வழக்கில் இதற்கு மேல் அக்கறை காட்டினால், ஒட்டு மொத்த நீதிபதிகளின் மாண்பும் தெருவுக்கு வந்து விடும் என்ற கவலையினாலும் கூடத்தான். மோடி மீதான ஊழல் குற்றச்சாட்டும் பிர்லா முதலான தரகு முதலாளிகளின் பணப் பட்டுவாடாவும் விசாரணைக்கு அப்பாற்பட்டவை. அதை விசாரிக்க உச்ச நீதிமன்றம் முயற்சித்தால் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஊழல்கள் எதிர்த்தரப்பால் தண்டவாளத்தில் ஏற்றப்பட்டு விடும் என்பது நீதிபதிகளுக்குத் தெரியும்.

பிர்லா, சகாரா போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் பல 100 கோடி கணக்கில் ஹவாலா பணத்தை ரொக்கமாக கையாள்கின்றன என்ற உண்மை, பண மதிப்பு நீக்கத்தை கொண்டாடிய ஊடகங்களின் 24 மணி நேர கவரேஜில் வரவில்லை. இதே காலகட்டத்தில் எஸ்ஸார் நிறுவனத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட மின்னஞ்சல்களில் சகாராவைப் போலவே பல்வேறு தரப்பு மூத்த அரசியல்வாதிகளுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்ட விபரங்களும் இருள் உலகுக்கு அனுப்பப்பட்டு விட்டது. நிலக்கரி இறக்குமதி மதிப்பை அதிகமாக காட்டி பணத்தை வெளிநாட்டில் பதுக்கிய அதானி, அம்பானி குழுமங்கள் பற்றிய செய்தியும் புதைக்கப்பட்டு விட்டிருக்கிறது.

500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுகளை செல்லாது என்று அறிவித்து தன்னிடம் உள்ள பணம் கருப்புப் பணம் அல்ல என்று ஒவ்வொரு குடிமகனும் நிரூபிக்க வேண்டும் (நிரூபிக்கப்படுவது வரை எல்லோரும் குற்றவாளிகளே) என்று கூறிய உத்தம சீலர்தான் பிரதமர் மோடி. அவரது பெயர் குறிப்பிட்டு பணப் பட்டுவாடா நடந்திருப்பது பற்றிய ஆதாரங்கள் கையில் இருந்தும் சி.பி.ஐ.யும் வருவாய் புலனாய்வுத்துறையும் விசாரிக்க மறுக்கின்றன.இவை போதுமான சாட்சியங்கள் அல்ல என்கிறது நீதிமன்றம்.

லஞ்சம் வாங்குபவர் பிரதமர், அதை மூடி மறைத்தவர், லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் தலைவர்; அதை விசாரிக்க மறுப்பவர்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள்; மொத்த விவகாரத்தையும் இருட்டடிப்பு செய்பவை ஊடகங்கள்.




இத்தகைய ஆதாரங்களின் அடிப்படையில் எல்லாம் புலன் விசாரணைக்கு உத்தரவிடுவோமானால், அரசமைப்பைக் காக்கும் பொறுப்பில் உள்ளவர்கள் இயங்கவே முடியாது. ஜனநாயகமும் பாதுகாப்பாக இருக்காது என்று நீதிபதிகள் அருண் மிஸ்ராவும் அமிதவா ராயும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கின்றனர். உண்மைதான், ஜனங்களின் நலனைக் காட்டிலும், ஜனநாயகத்தின் நலன் அல்லவோ முக்கியம்!

● அறிவு

# பண மதிப்பு நீக்கம்: கருப்பை வெள்ளையாக்கியதே மோடியின் சாதனை!

**நாட்டில் நான்கு இலட்சம் கோடி ரூபாய் கருப்புப் பணம் புழங்குவதாகக் கூறி வந்தார், மோடி. அந்தக் கருப்பெல்லாம் வங்கிகளின் வழியாகவே வெள்ளையாக மாறிச் சென்றுவிட்டதை வங்கிகளின் பண இருப்பு விவரம் காட்டுகிறது.**

கடந்த ஆண்டு நவம்பர் 8-ஆம் தேதியன்று நள்ளிரவில் அறிவிக்கப்பட்ட மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால், வங்கியிலுள்ள தமது சேமிப்புப் பணத்தை எடுக்க முடியாமல் மக்கள் பரிதவித்தார்கள். அன்றாடச் செலவுக்கு பணத்தை வங்கியிலிருந்து எடுக்க நீண்ட வரிசையில் நாள் கணக்கில் பிச்சைக்காரர்களைப்போல நின்றும், ஒருமுறைக்குமேல் பணம் எடுத்தால் கைவிரலில் அழியாத மை வைக்கப்பட்டும் அவமானப்பட்டார்கள். தொழிலாளர்கள் வேலையை இழந்து பட்டினிக்குத் தள்ளப்பட்டார்கள். விவசாயிகள் திண்டாடினார்கள். சிறு தொழில்கள் முடங்கின. நாடே நிலைகுலைந்துபோனது.

இருப்பினும், இந்தத் துயரங்கள் அனைத்தும் இன்னும் 50 நாட்களில் நீங்கிவிடும் என்று மோடியும் அவரது ரசிகர்களும் வாய்ப்பந்தல் போட்டார்கள். உலகில் எந்த அரசின் தலைவரும் செய்திராத மிகவும் துணிச்சலான நடவடிக்கை என்று துதிபாடினார்கள். ஜனவரி முதல் தேதிக்குப் பிறகு பாருங்கள், பட்ஜெட் வரப் போகிறது பாருங்கள், நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடப் போகிறது பாருங்கள் என்று ஆரூடம் சொன்னார்கள். அத்தனையும் அண்டப்புளுகு என்று நிரூபணமாகிவிட்டது.




மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையானது, நாட்டையும் மக்களையும் தீராத அவலத்தில் தள்ளிவிட்டு தோல்வியடைந்து கிடக்கிறது. பணமதிப்பு நீக்க அறிவிப்பு வெளியாகி 4 மாதங்கள் கடந்து விட்டன. ஆனால், இன்றளவும் எவ்வளவு பழைய 500,1000 ரூபாய் நோட்டுகள் வங்கியில் டெபாசிட் செய்யப்பட்டது, எவ்வளவு புதிய நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்டது, எவ்வளவு கருப்புப்பணம் பிடிக்கப்பட்டது என்பது குறித்து ஒரு தகவலும் இல்லை.

கடந்த நவம்பர் மாதம் 8-ஆம்தேதி நிலவரப்படி, புழக்கத்தில் இருந்த ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகளின் மதிப்பு ரூ.15.44 லட்சம் கோடியாகும். இதில், ரூ.4 லட்சம் கோடி அளவுக்குக் கருப்புப்பணம் புழக்கத்தில் உள்ளது என்றும், அதைத் தடுக்கவே இந்த திடீர் நடவடிக்கை என்றும் கதையளந்தனர். ரூ.500,1000 நோட்டுகள் செல்லாது என்ற திடீர் அறிவிப்பின் காரணமாக, கருப்புப்பணப் பேர்வழிகள் பதுக்கியுள்ள அந்த நோட்டுகள் வங்கிக்கு திரும்பி வராது என்பதால், அந்தக் கருப்புப் பணத்தை மீட்டு சமூக நலத் திட்டங்களுக்குக் கூடுதலாகச் செலவிடுவோம், சாமானிய மக்களின் ஜன்தன் வங்கிக் கணக்கில் போடுவோம் என்றனர். கருப்புப்பணப் பேர்வழிகள் மீது 50 சதவீதத்துக்கும் மேலாக அபராதம் விதித்து தண்டிப்போம் என்று வீரவசனம் பேசினர்.

ஆனால், மோடி வகையறாக்களின் பித்தலாட்டத்துக்கு மாறாக, கடந்த டிசம்பர் மாதம் 30-ஆம் தேதி வரையில் செல்லாது என்று அறிவிக்கப்பட்ட ரூ.500,1000 நோட்டுகள் ரூ.14.5 லட்சம் கோடி அளவுக்கு (94%) வங்கிகளில் திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டதாக தக




வல்கள் வெளியாகியுள்ளன. கருப்புப் பணப் பேர்வழிகள் எவ்வித செலவுமில்லாமல், அபராதம், தண்டனை ஏதுமில்லாமல் தம்மிடமுள்ள கருப்பை வெள்ளையாக்கிக் கொள்ள செய்யப்பட்ட ஏற்பாடுதான் மோடியின் பண மதிப்பு நீக்க நடவடிக்கை. இந்த அயோக்கியத்தனத்தை மூடிமறைத்துவிட்டு, பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் வெளியில் இருந்த எல்லா கருப்புப் பணமும் வங்கிகளுக்கு வந்து சேர்ந்து விட்டது என்றும், மோடியின் நடவடிக்கை மாபெரும் வெற்றியைச் சாதித்துவிட்டது என்றும் வெட்கமின்றி மோடி ரசிகர்கள் கூத்தாடுகின்றனர்.

உண்மையில், சாமானிய மக்களின் ஜன்தன் வங்கிக் கணக்கில் கருப்புப்பணப் பேர்வழிகள் பணத்தைப் போட்டு வெள்ளையாக்கிக் கொண்டதுதான் நடந்துள்ளது. முதலில் பா.ஜ.க. வகையறாக்கள் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கிக் கொண்டனர். பிறகு எல்லா கருப்புப்பண பேர்வழிகளும் தங்களிடமுள்ள கருப்பை வெள்ளையாக மாற்றி வீட்டுமனைத் தொழிலில் முதலீடுகள் செய்துள்ளார்கள் என்று ஆதாரங்களுடன் அம்பலமாகியது. இப்படி கருப்புப்பணப் பேர்வழிகள் தம்மிடமுள்ள ரொக்கப் பணத்தை வெள்ளையாக்கிக் கொள்ள ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதன் மூலம் ஏறத்தாழ ரூ.15 லட்சம் கோடி அளவுக்கு இந்தியாவில் நடந்துள்ள மிகப் பெரிய ஊழல் இதுதான். இதற்காகத்தான் நமது வரிப் பணத்திலிருந்து ரூ.42,000 கோடி செலவிட்டு புதிய ரூ.500, ரூ.2,000 நோட்டுக்களை அச்சிட்டுள்ளார்கள்.

மோடியின் நடவடிக்கையால் பண அட்டை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது என்று மோடி ரசிகர்கள் ஆரவாரித்தனர். ஆனால் ''பிரிக் ஓர்க்ஸ் மீடியா'' என்ற நிறுவனம் எட்டு பெருநகரங்களில் பண அட்டை பயன்படுத்துவோரிடம் நடத்திய ஆய்வில், கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் பண அட்டையின் பயன்பாடு 64.7 சதவீதமாக இருந்ததாகவும், ஆனால் கடந்த பிப்ரவரியில் அது 31.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்து விட்டது என்றும், அன்றாடம் பண அட்டை பயன்படுத்துவோரின் புழக்கம் 39.8 சதவீத்திலிருந்து தற்போது 9.2 சதவீதமாகச் சரிந்துவிட்டது என்றும் தெரிவித்துள்ளது. பணமதிப்பு நீக்க நடவடிக்கையால், வங்கிகளில் பணம் எடுக்க முடியாமல் அவதிப்பட்டவர்கள், வேறுவழியின்றி அப்போது பண அட்டையைத் தற்காலிகமாகப் பயன்படுத்தினர். ஆனால் வங்கிகளில் ரொக்கப் பணத்தை எடுக்க கட்டுப்பாடுகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ளதால், பண அட்டைகள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மேலும் குறைந்து கொண்டேபோய், மோடியின் பணமில்லா பொருளாதாரத் திட்டம் புஸ்வாணமாகிவிட்டது.

பண மதிப்பு நீக்க நடவடிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிய போதிலும், பிரதமர் மோடி வாய் திறக்க மறுக்கிறார். ஆனால் நாடாளுமன்றத்தக்கு வெளியே பொதுக் கூட்டங்களில் பண மதிப்பு நீக்க நடவடிக்கையை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை, கருப்புப் பணத்தை ஆதரிப்பவர்கள் என்று சாடி சவடால் அடித்துக் கொண்டிருக்கிறார். சாமானிய மக்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டு பரிதவித்த போதிலும், நூற்றுக்கும் மேற்பட்டோர் அதிர்ச்சியால் மரணமடைந்துள்ள போதிலும், ஒரு நாட்டையை நிலைகுலையச் செய்த இக்கொடுஞ்செயலுக்கு எந்த வகையிலும் பொறுப்பேற்காமல் ஆணவத்தோடு இன்னமும் தமது செயலை நியாயப்படுத்தி வருகிறார்.

சம்பளத்தைப் பெறுவதற்கும், அரசின் மானியங்களைப் பெறுவதற்கும் அனைவருக்கும் வங்கிக் கணக்கைக் கட்டாயமாக்கியுள்ள மோடி அரசு, இப்போது வங்கியில் பணத்தை டெபாசிட் செய்வதற்கும், பரிவர்த்தனைக்கும் கட்டணம் விதிக்கக் கிளம்பியுள்ளது. ஹெச்.டி.எப்.சி. முதலான தனியார் வங்கிகள் தமது வாடிக்கையாளர்கள் மாதம் 4 முறைக்கு மேல் ரொக்கமாக டெபாசிட் செய்தாலோ, பணம் எடுத்தாலோ ஒவ்வொரு பணப் பரிவர்த்தனைக்கும் ரூ.150 வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும் என அறிவித்துள்ளன. அரசுத்துறை வங்கியான பாரத ஸ்டேட் வங்கியானது, வாடிக்கையாளர்கள் தமது வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச இருப்புத் தொகையாக ரூ.5,000 வைத்திருக்காவிடில் அபராதம் வசூலிக்கப்படும் என்றும், பரிவர்த்தனைக்கு ரூ.50 கட்டணம் என்றும் அறிவித்துள்ளது.

சாமானிய மக்களால் ரூ.5,000 அளவுக்கு வங்கியில் இருப்பு வைக்க சாத்தியமே இல்லாத நிலையில், இருப்பு இல்லையென்பதற்காக அபராதம் செலுத்திவிட்டு அரசின் மானியங்களை அரைகுறையாகப் பெற வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளிவிடும் அயோக்கியத்தனத்தைத்தான் மோடி அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இத்தனை நாளும் நாட்டு மக்களை துன்புறுத்தி, நிலைகுலைய வைத்தது போதாதென்று, வங்கிப் பரிவர்த்தனைக்குக் கட்டணம் விதித்தும், ரூ.5,000 இருப்பு வைக்கவில்லையென்றால் அபராதம் விதித்து தண்டிக்கவும் கிளம்பிவிட்ட மோடி கும்பலின் இப்பாசிசத் திமிரை நாம் இனியும் சகித்துக் கொண்டிருக்கத்தான் முடியுமா?

● குமார்

# கீழடி அகழாய்வு:
# பழந்தமிழர் நாகரிகத்தின் கருவூலம்!

**கீழடி அகழாய்வை நிறுத்திவைப்பதன் மூலம் திராவிட வரலாற்றை இருட்டடிப்பு செய்துவிடலாம் எனப் பகற்கனவு கண்ட ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல், தமிழ் மக்களின் எதிர்ப்பால் பின்வாங்கியிருக்கிறது.**

இந்தியா வேதங்களின் நாடு என்றும், வேத கலாச்சாரம்தான் இந்தியக் கலாச்சாரம் என்றும் கூறிக்கொண்டு இன்றைக்கு ஆட்சியில் உள்ள இந்து மதவெறிக் கும்பல் ஆரியப் பார்ப்பனியக் கலாச்சாரத்தை நம்மீது திணித்து வருகிறது. ஆனால், ஆரியர்களுக்கு முன்பே, அவர்களைவிடச் சமூக அமைப்பிலும், கலாச்சாரத்திலும், கலை இலக்கியங்களிலும் முன்னேறிய சமூகமாக, திராவிட சமூகம் விளங்கியது என்பது கால்டுவெல் போன்றவர்களின் மொழி ஆய்வுகள் மூலமாகவும், சங்க இலக்கிய ஆய்வுகள் மூலமாகவும், சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியின் மூலமாகவும் ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், ஆரிய கலாச்சாரத்திற்கு முந்தைய, அதற்குச் சற்றும் தொடர்பில்லாத, சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்த ஒரு நகர சமூக அமைப்பு தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது என்பதை உறுதி செய்யும் வரலாற்றுச் சான்றுகள் கீழடி அகழ்வாய்வின் மூலம் தற்போது கிடைத்துள்ளது. இந்து மதவெறிக் கும்பலின் ஆரிய பித்தலாட்டங்களுக்கு எதிரான மிக முக்கியமான இந்தக் கண்டுபிடிப்பை இருட்டடிப்பு செய்வதுடன், கீழடி ஆய்வைத் தொடரவிடாமல் முட்டுக்கட்டை போடும் வேலையிலும் மத்திய அரசு இறங்கியது. பா.ஜ.க. அரசின் இந்த அயோக்கியத்தனத்திற்கு எதிராகத் தமிழகத்தின் அறிவுத்துறையினர், அரசியல் கட்சிகள், ஜனநாயக சக்திகள் எனப் பலரும் கண்டனங்கள் எழுப்பிய பிறகு, கீழடி ஆய்வுகள் தொடரும் என அறிவித்துத் தற்காலிகமாகப் பின்வாங்கியிருக்கிறது, இந்து மதவெறிக் கும்பல்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்திற்கு அருகில் உள்ள கீழடியில் மைய அரசின் தொல்லியல் துறை கடந்த இரண்டு ஆண்டுகளாக, இரண்டு பிரிவுகளாக அகழாய்வு நடத்தியது. வைகையாற்றுக் கலாச்சாரம் என ஆய்வாளர்களால் அழைக்கப்படும் கீழடி பள்ளிச் சந்தைத் திடலில் காணப்படும் தொல்லியல் மேடு 110 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் வெறும் 50 செண்ட் நிலப் பரப்பில் நடந்த அகழாய்வு மூலம், ஏறக்குறைய கி.மு. 1000-இல் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் போன்றவற்றை நிரூபிப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

வரிசை வரிசையாகக் கால்வாய்கள்; அதன் முகப்பிலே பெரும் தொட்டிகள்; தொட்டிக்குள் தண்ணீர் உள் செல்லவும் வெளிவருவதற்குமான அமைப்புகள்; கால்வாய் தடத்தை ஒட்டிச் சிறியதும் பெரியதுமான ஆறு உலைகள்; கால்வாயின் ஆரம்பப் பகுதியில் வட்டக் கிணறுகள்; மூடிய வடிகால்கள், திறந்த வடிகால்கள், சுடுமண் குழாய்களினால் ஆன வடிகால்கள் என மூன்று விதமான வடிகால் அமைப்புகள் - என்றவாறு ஒரு முழுமையான நகர அமைப்பை உறுதி செய்யும் சான்றுகள், தென்னிந்தியாவில் முதன்முறையாகக் கீழடியில்தான் கிடைத்திருக்கிறது.

சிவகங்கை மாவட்டம், கீழடியில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட பகுதி. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் நாகரிகம் பூதமாக வெளிவந்து, ஆரிய-பார்ப்பன திரிபுகளுக்கு ஆப்பறைந்தது.



பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அல்லது கட்டிடங்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, அதன் மேற்கூரைகள் ஓடுகளால் வேயப்பட்டு இருந்திருக்கலாம் எனவும், வீடுகளின் அருகே பட்டினப்பாலையில் குறிப்பிடப்படும் சுடுமண் உறைகேணிகளும் இருந்திருக்கலாம் எனவும் இங்கு கிடைத்துள்ள சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், ஆப்கானிஸ்தானில் கிடைக்கும் சூது பவளத்திலான மணிகளும், ரோமாபுரியைச் சார்ந்த மட்பாண்டங்களும், வட இந்திய பிராகிருத எழுத்துக்களும் கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கருப்பு, சிவப்பு நிறங்களிலான ஏறத்தாழ 1,000 கிலோகிராம் எடையளவுக்கு மண் ஓடுகளும் அகழ்வாராய்ச்சியில் கிடைத்திருக்கின்றன.



பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சுடுமண் உறைகேணிகள் இருந்ததற்கான சான்று.

சிந்து சமவெளி நாகரிகத்தில்கூட மட்பாண்டங்கள் வெளிப்புறத்தில் சுடப்பட்டதைக் குறிக்கும் வகையில், அவற்றின் வெளிப்புறம் கருநிறத்தில் இருந்தன. ஆனால், கீழடியில் கிடைத்த மட்பாண்டங்கள் உட்புறத்திலிருந்து சுடப்பட்டதைக் குறிக்கும் விதமாக அவற்றின் உட்புறம் கருநிறத்தில் இருக்கிறது. கீழடியில் வாழ்ந்த சமூகம் தொழில்நுட்பரீதியில் முன்னேறிய சமூகமாக இருந்திருப்பது இதன் மூலம் தெரியவந்துள்ளது.

கீழடியில் தொழிற்பட்டறைகள் இருந்ததற்கான அடையாளங்களும் கண்டறியப்பட்டுள்ளன. நெசவுக்குரிய தக்கையில் துவங்கி எண்ணற்ற எளிய தொழில்நுட்பக் கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. கீழடியில் கண்டறியப்பட்ட சுமார் 5,300-க்கும் மேற்பட்ட பொருட்களில் வணிகம், கலை, தொழில்நுட்பம், எழுத்தறிவு ஆகியவற்றின் சான்றுகளைக் காண முடிகிறது. மொத்தத்தில், ஒரு மேம்பட்ட நாகரிகத்தைக் கொண்ட சமூக அமைப்பாக கீழடி இருந்துள்ளது.

சென்ற ஆண்டு (டிசம்பர் மாதம்) திருவனந்தபுரத்தில் நடைபெற்ற இந்திய வரலாற்றுப் பேராயத்தின் மாநாட்டில் கீழடி அகழாய்வு தொடர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த அமர்வுக்குத் தலைமை வகித்த வரலாற்று அறிஞர் ரொமிலா தாப்பர், ''கீழடியானது தமிழகத்தில் கிடைத்துள்ள மிக முக்கியமான கண்டுபிடிப்பாகும். இதன் மூலம் தமிழக வரலாற்றை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அதற்கான ஆய்வு மேலும் தொடர வேண்டும்'' என்று உரையாற்றியிருக்கிறார்.

கீழடியில் கிடைத்துள்ள சான்றுகள் அனைத்தும், வெறும் 50 சென்ட் நிலத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்தவை. மொத்தமாக உள்ள 110 ஏக்கர் நிலத்திலும் அகழ்வாய்வு செய்தால், அது தமிழக வரலாற்றை மட்டுமல்ல; இந்திய வரலாற்றையே திருப்பிப் போடும் ஒரு அகழ்வாராய்ச்சியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. 1970-க்குப் பிறகு தமிழகத்தில், மைய அரசின் தொல்லியல் துறையால் நடத்தப்படும் மிகப்பெரிய ஆய்வு கீழடி மட்டுமே.

கீழடியில் இதுவரை கிடைத்துள்ள பொருட்களை ஆய்வுசெய்கையில் ஒன்றில்கூட மதம் தொடர்பான அடையாளங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏனென்றால், பழங்காலத் தமிழர்களின் பண்பாடு மூத்தோர் வழிபாடு, நடுகல் வழிபாடு சார்ந்த பண்பாடாகும். பிற்காலத்தில்தான் மதங்கள் தோன்றியிருக்கின்றன. சங்க இலக்கியங்கள் கூறுகின்ற, மதங்கள் தோன்றுவதற்கு முந்தைய நாகரிகத்தின் அடையாளம்தான் கீழடி. ''தமிழ் மொழியை ஒரு சமயச்சார்பற்ற மொழி'' என்று மதிப்பீடு செய்த மொழியியல் அறிஞர் கால்டுவெல்லின் கருத்துக்குச் சான்றாக கீழடி நாகரிகம் இருப்பதை இந்த ஆய்வுகள் உறுதி செய்கின்றன. பெருந்தெய்வங்கள் மற்றும் மதமற்ற சமூகம் இந்தியாவில் இருந்துள்ளது என்பதை நிறுவுகிற ஆய்வுகளை, இந்தியச் சமூகமே வேத-வைதீக மரபுடையது எனப் பிதற்றிக் கொண்டிருக்கும் காவிக் கூட்டத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதனால்தான் இந்த ஆய்வை, அதன் துவக்க நிலையிலேயே நிறுத்தி வைப்பது என்ற முடிவை மத்திய பா.ஜ.க. அரசு எடுத்தது. குஜராத்தின் தொலவிராவில் 13 ஆண்டுகள், லோத்தலில் 5 ஆண்டுகள், ஆந்திராவின் நாகார்ஜுன கொண்டாவில் பத்து ஆண்டுகள் அகழாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆனால், கீழடி ஆராய்ச்சியை மட்டும் இரண்டே ஆண்டுகளோடு மங்களம் பாடுவதற்கு பா.ஜ.க. அரசு முனைப்புடன் செயல்பட்டது. தற்போது வேறு வழியின்றி மூன்றாம் கட்ட அகழ்வாய்வு நடைபெறும் என அறிவித்திருக்கிறது. தமிழக மக்கள் விழிப்போடு இல்லையென்றால், இந்த அறிவிப்பைக் கிடப்பில் போட்டுவிடவும் காவிக் கும்பல் தயங்காது.

மட்பாண்டங்கள் உட்புறத்தில் சுடப்பட்டு பயன்படுத்தப்பட்டிருப்பதற்கான சான்று.



மேலும், அகழாய்வில் கண்டறியப்பட்ட பொருட்களில் எத்தனை பொருட்களின் மூலக்கூறு மாதிரிகளை கார்பன்-14 (கார்பன் தேதியிடல்) பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும் என்பதை மத்திய தொல்லியல் துறைதான் முடிவு செய்யும். இந்நிலையில் இராஜஸ்தான் காளிபங்கன் அகழாய்வில் இருந்து 28 பொருட்களையும், தொலவிராவில் இருந்து 20 பொருட்களின் மாதிரியையும் ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர். கீழடியில் கண்டறியப்பட்ட மூலப் பொருட்களின் மாதிரியில் குறைந்தது பத்து மாதிரிகளையாவது ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என ஆய்வாளர்கள் கூறி வந்த நிலையில், இரண்டை மட்டுமே கார்பன்14 பகுப்பாய்வுக்கு அனுப்ப மத்திய தொல்லியல் துறை அனுமதித்துள்ளது.

**கீழடியில் இதுவரை கிடைத்துள்ள பொருட்களை ஆய்வுசெய்கையில் ஒன்றில்கூட மதம் தொடர்பான அடையாளங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ‘‘தமிழ் மொழியைச் சமயச்சார்பற்ற மொழி’’ என்று மதிப்பீடு செய்த அறிஞர் கால்டுவெல்லின் கருத்துக்குச் சான்றாக கீழடி நாகரிகம் அமைந்திருப்பதை இந்த சான்றுகள் உறுதி செய்கின்றன.**

இல்லாத சரஸ்வதி நதியைக் கண்டறியவும், அந்நதியே சிந்து சம்வெளி நாகரிகத்திற்கான தொடக்கம் எனக் கூறி, தாங்கள் இதுவரைப் பிரச்சாரம் செய்தது அனைத்தும் உண்மை என நிரூபிக்கக் கோடிக்கணக்கில் செலவிட்டுக் கொண்டிருக்கிற இக்காவிக்கூட்டம், அறிவியல்பூர்வமாக கீழடியில் நடத்தப்படும் ஆய்வை மட்டும் மாற்றந்தாய் மனப்பாங்கு கொண்டு பார்க்கிறது. மேலும், அயோத்தியில் இராமாயண அருங்காட்சியகம் அமைக்க ரூ.151 கோடியை ஒதுக்கியுள்ள மத்திய அரசு, கீழடியில் கண்டறியப்பட்ட பொருட்களைக் காலப் பகுப்பாய்விற்கு அனுப்ப வெறும் ஒரு இலட்சத்தை மட்டுமே ஒதுக்கியுள்ளது.

ஆரியர்கள் வந்தேறிகள் என்ற உண்மையை இந்துத்துவா கும்பல் எப்போதும் ஏற்றுக் கொள்வது கிடையாது. காவிக்கு ம்பலின் வரலாற்றுத் திரிபின்படி, ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடிகள். அதேபோன்று வேதங்களில் கூறப்பட்டுள்ள கலாச்சாரம்தான் இந்தியாவின் கலாச்சாரம், அதனைத் தாண்டி வேறு எந்த கலாச்சாரமும் இந்தியாவில் இருக்கவில்லை. சமஸ்கிருதம்தான் இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் என்றும், மற்ற இந்திய மொழிகள் அனைத்தும் அதிலிருந்துதான் தோன்றின என்று அவர்கள் கூறிவருகின்றனர்.

மேலும், திராவிடர் என்ற கருத்தாக்கம், ஆரிய-திராவிடப் பாகுபாடு, திராவிடர்களை ஆரியர்கள் அடிமைப்படுத்தியது ஆகியவை ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி எனக் கூறி, தொன்மை வரலாறையெல்லாம் மறுத்து வருகிறது.

ஒரே கலாச்சாரம், ஒரே மொழி, ஒரே நாடு - இந்து, இந்தி, இந்தியா என்ற தங்களது அரசியல் நோக்கத்திற்கு ஏற்றவாறு நம் நாட்டின் வரலாற்றைக் கட்டமைக்கவே இந்துத்துவா கும்பல் விரும்புகிறது. ஆனால், இதனை உண்மை என நிறுவுவதற்கு அவர்களிடம் சான்றுகள் எதுவும் இல்லை. புராணங்களிலும், இதிகாசங்களிலும் கூறப்பட்டுள்ள கற்பனைகளை, கட்டுக் கதைகளை மட்டுமே அவர்களால் சான்றுகளாகக் காட்ட முடிகின்றது. இந்தக் கட்டுக்கதைகளை உண்மை என நிரூபிக்கும் ஆதாரங்களைத் தேடுவதையே இந்தியத் தொல்லியல் துறையின் முழுநேரப் பணியாக அவர்கள் மாற்றியிருக்கின்றனர்.

காவிக்கும்பலின் இந்தப் பொய்ப் பிரச்சாரத்திற்கு வரலாறு நெடுகிலும் தமிழகம் ஒரு எதிர்ப்பின் அடையாளமாக இருந்து வந்துள்ளது. ஆரிய-திராவிட முரண்பாட்டையும் ஆரியர்கள் திராவிடர்களை அடிமைப்படுத்தியதையும் முன்வைத்துத் தமிழகம் தொடர்ந்து போராடி வந்துள்ளது. இந்திய மொழிகள் அனைத்திற்கும் சமஸ்கிருதம்தான் தாய் மொழி என்ற பிரச்சாரத்திற்கு எதிராக, தமிழ் மொழி சமஸ்கிருதத்தின் சார்பு இல்லாமல் தனித்து இயங்கக் கூடிய செம்மொழி என்றும், தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்துக்கு நேர் எதிர் தன்மை கொண்ட திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும் கால்டுவெல்லால் ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சமஸ்கிருத, ஆரிய கலாச்சார மேலாதிக்கத்தை நிறுவ விரும்பும் காவிக் கும்பலின் வரலாற்று மோசடியின் மீது விழுந்த சம்மட்டி அடியாக கீழடி அகழ்வாய்வு அமைந்திருக்கிறது. சீப்பை ஒளித்து வைத்துவிட்டுக் கல்யாணத்தை நிறுத்திவிடும் முட்டாள்தனம் போல, கீழடி அகழ்வாராய்ச்சியைத் தடுப்பதன் மூலம் திராவிட வரலாற்றை இருட்டடிப்பு செய்துவிடலாம் எனப் பகற்கனவு காண்கிறது, காவிக் கும்பல்.

● அழகு

வட்டவடிவிலான உலைகள்.



Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



"சூத்திரனுக்குக் கல்வி எதற்கு?" என்ற மனுநீதியை இப்பொழுது பச்சையாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதால், தகுதி, திறமை, அகில இந்திய நுழைவுத் தேர்வு (நீட்), இட ஒதுக்கீடு எதிர்ப்பு எனப் பின்வாசல் வழியாக ஆதிக்கம் செலுத்த முயலுகிறது, பார்ப்பனியம்.

நோக்கத்தையே சிதைத்துவிடும் என்பதால், அந்தமான் யூனியன் பிரதேச அரசு, பழங்குடியினருக்கான தகுதி மதிப் பெண்ணை அந்த ஆண்டிற்கு மட்டும் 35 சதவீதமாகக் குறைத்து உத்தரவிட்டது. இதன் பிறகும்கூட, எட்டு பழங் குடியின மாணவர்கள் மட்டுமே நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று, கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆக, கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டிலேயே பழங்குடியின மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 17 இடங்களில், ஒன்பது இடங்கள் (1+8) போக, மீதமுள்ள 8 இடங்கள் பழங்குடி யினத்தைச் சேராத மாணவர்களுக்குத் தாரை வார்க்கப்பட்டது.

ஒரு வருடத்திற்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்த இந்தச் சலுகையைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல், குடியே மூழ்கிவிட்டது போலக் குறிப்பிட்டு, இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கு மனு போட்டான், போர்ட் பிளேயரைச் சேர்ந்த ஒரு மாணவன். இந்தப் பொதுநல விரும்பி எந்த சாதியை, எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவனாக இருப்பான் என விளக்கத் தேவையில்லை.

இந்தக் கடிதத்தை ஆதாரமாக எடுத்துக் கொண்ட இந்திய மருத்துவக் கவுன்சில், மாணவர் சேர்க்கையில் மிகப் பெரும் மோசடி நடந்துவிட்டதாகக் குற்றஞ்சுமத்தியது. தகுதி மதிப் பெண்ணைக் குறைத்ததை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டு, அந்த எட்டு மாணவர்களைக் கல்லூரியிலி ருந்து வெளியேற்றுமாறும் உத்தரவிட்டது. இதற்கு எதிராக நிக்கோபார் பழங்குடியின கவுன்சில் கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில், இந்திய மருத்துவக் கவுன் சிலின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில்தான், பள்ளிக்கூடங்களைப் புறக்கணிக்குமாறு நிக்கோபார் பழங்குடியின கவுன்சில் அறைகூவல் விடுத்தது.

அந்தமான் தீவும், தலைநகர் போர்ட்பிளேயரும் குடியேறி களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், அம்மண்ணின் மைந்தர்களான பழங்குடியின மக்கள் நிக்கோபார் உள்ளிட்ட தூரத் தீவுகளில்தான் வசித்துவருகின்றனர். இவர்கள் தமது குழந்தைகளின் ஆரம்பக் கல்விக்கு அரசுப் பள்ளிகளையே நம்பியுள்ளனர்.

மாநிலத் தலைநகர்களில் உள்ள அரசு பள்ளிகளின் தரமே அதலபாதாளத்தில் இருக்கும்பொழுது, தீவுக்கூட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளின் தரத்தைப் பற்றிச் சொல்ல வேண் டியதேயில்லை. தீவுகளில் அமைந்துள்ள பள்ளிகளில் நிய மிக்கப்படும் ஆசிரியர்களின் தகுதி, திறமை, அக்கறையோ, கிராமப்புற பள்ளி ஆசிரியர்களைவிட மிகவும் மோசமானது. மேலும், பழங்குடியின மாணவர்களுக்கு அவர்களின் தாய் மொழியில் கல்வி கற்கும் வாய்ப்பும் கிடையாது. இந்தத் தடைகளையெல்லாம் தாண்டித்தான், பழங்குடியினத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை உயர் கல்வியில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

இப்படியான பாதகமான நிலையில், தீவுகளைச் சேர்ந்த பழங்குடியினரையும் அந்தமானில் குடியேறியிருக்கும் மேல் சாதிகளைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தினர், இராணுவத்தினர், வியாபாரிகளின் பிள்ளைகளையும் ஒரேதட்டில் வைத்துப் பார்ப்பது பொது அறிவுக்கு எதிரானதும் அநீதியானதுமாகும்.

''சூத்திரனுக்குக் கல்வி எதற்கு?'' என்ற மனுநீதியை இப் பொழுது பச்சையாக நடைமுறைப்படுத்த முடியாது என்ப தால்தான், தகுதி, திறமை, அகில இந்திய நுழைவுத் தேர்வு (நீட்), இட ஒதுக்கீடு எதிர்ப்பு எனப் பின்வாசல் வழியாக ஆதிக்கம் செலுத்த முயலுகிறது, பார்ப்பனியம்.

2005-இல் அந்தமானைத் தாக்கிய சுனாமியில் பாரம் பரிய பழங்குடியின மருத்துவர்களில் பலர் உயிர் இழந்து விட்டனர். அதனைத் தொடர்ந்து, தீவுப் பகுதிகளில் இந்திய அரசு திணித்த மனிதாபிமான உதவித் திட்டங்கள், பழங்குடி யினரின் உணவுப் பழக்கத்தில், கலாச்சாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களிடத்தில் சர்க்கரை, இதய நோய்களை ஏற்படுத்திவருவதாக செய்திகள் வெளிவருகின்றன.

''தகுதி'', ''திறமை''யின் அடிப்படையில் அந்தமான் கல் லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களில் எத்தனை பேர் இப் பழங்குடியினருக்கு மருத்துவம் பார்க்க முன்வருவார்கள்? தகுதி, திறமை என்ற போர்வையில் சேர்க்கப்படும் மேல்சாதி மாணவர்கள் அந்தமான் கோட்டாவில் படித்துவிட்டு, அமெ ரிக்காவில் செட்டில் ஆக வழிதேடுவார்களே தவிர, தீவு களின் பக்கம் தலைவைத்தும் படுக்கமாட்டார்கள்.

தகுதி, திறமை என்ற புதிய மனுநீதியின் அடிப்படை யில் பழங்குடியின மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியை மறுத்ததன் மூலம் நிக்கோபார் பழங்குடியின மக்களின் சுகாதார உரிமையையும் பறித்திருக்கிறது, இந்திய மருத் துவ கவுன்சில். இது, நோய்வாய்ப்பட்டு வரும் அப்பழங் குடியினரைச் சாவின் விளிம்பில் தள்ளுவதற்கு மட்டுமல்ல, அழிந்துவரும் நிலையில் உள்ள அப்பழங்குடியினரை இன அழிப்புச் செய்வதற்கும் ஒப்பானதாகும்.

இன்று நிக்கோபாருக்கு நடந்திருப்பது நாளை தமிழகத் துக்கும் நடக்கும். மருத்துவப் படிப்பில் திணிக்கப்படும் நீட் தேர்வு முறை, மருத்துவக் கல்வியை முற்றுமுழுதாக பணக் காரர்களின் உரிமையாக்கும் என்பது மட்டுமல்ல, தமிழகத் தில் தமிழ் பேசும் மருத்துவர்கள் இல்லாத நிலையும் விரை வில் ஏற்படும். மருத்துவருக்குப் புரியும் மொழியில் பேசும் பொருட்டு, தமிழ்நாட்டு நோயாளிகள் இந்தியும் ஆங்கில மும் கற்றுக் கொள்ளவேண்டியிருக்கும்.

● ஆர்.ஆர்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.




## குற்றவாளி ஜெயாவுக்கு அரசு மரியாதையா?

**ஜெயா படத்தை அரசு அலுவலகங்களிலிருந்து நீக்கு!**
**மெரீனாவில் இருந்து ஜெயா சமாதியை உடனே அகற்று !**
**தீய சக்தி ஜெயாவின் படத்தை பாட நூல்களிலிருந்து அழி !**

*தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டங்கள்!*










